Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

# தமிழ் Mirror





**ஒருவர் தம் குற்றத்தை அறிவாரானால், அதனாலேயே அவர் அறிவாளியாகிறார். தான் அறிவாளி என்று நினைக்கிற ஒரு மூடன், உண்மையிலேயே மூடனாக இருக்கிறான். (தர்மபோதனை)**

WEDNSDAY MAY 26, 2021

புதன்கிழமை மே 26 | ஒளி: 06 கதிர்: 05 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ FREE



## கடைகளைத் திறக்காமல் பொருள்களை விநியோகிக்க

# ‘மாற்றுவழி யோசனை’

### தவறான நடத்தை மோசமாகப் பாதிக்கும்

அத்தியாவசிய பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக, பயணக்கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட நேரத்தில், பொதுமக்கள் நடந்துகொண்ட விதம் நல்லதல்ல எனத் தெரிவித்துள்ள கொவிட்-19 தொற்றைக் கட்டுப்படுத்தும் ஜனாதிபதி செயலணியின் பிரதானியான ஜெனரல் ஷவேந்திர சில்வா, கடைகளைத் திறக்காமல், அத்தியாவசிய பொருள்களை விநியோகிக்கும் செயற்பாடுகள் தொடர்பில் ஆராயப்படுகின்றது என்றார். தொடர்ச்சி P2

## அமெரிக்கா அவசர அறிவிப்பு



கொரோனா வைரஸ் தொற்று நிலையை அடுத்து, இலங்கைக்கு பயணம் செய்ய வேண்டாம் என அமெரிக்க பிரஜைகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவல் நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகின்றமையை சுட்டிக்காட்டி, அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தால் இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

4ஆவது நிலை எச்சரிக்கை மட்டத்துக்குள் இலங்கையை அமெரிக்கா உள்ளடக்கியுள்ளது. தொடர்ச்சி P2



## ஓராண்டுக்கு முன்னர் சரிந்த ஓர் ஆலமரம்

முழுச் செய்தி P5

## திருமலையில் மரணிப்போர்

# கிண்ணியாவில் நல்லடக்கம்

அப்துல்சலாம் யாசீம், ஹஸ்பர் ஏ ஹலீம்

திருகோணமலை மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றால் மரணிப்பவர்களின் உடல்களை, கிண்ணியா-மஹமாறு கிராமத்தில் நல்லடக்கம் செய்ய சுகாதார சேவைகள் பணியகம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்த அனுமதிக் கடிதம், சுகாதார சேவைகள் பணியகத்தால் நேற்று (25) அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக திருகோணமலை சுகாதார சேவைகள் பணியகத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார். தொடர்ச்சி P2

## வீல்பரோ வினையானது



பயணத்தடை தளர்த்தப்பட்டதை அடுத்து அத்தியாவசிய பொருள்களை கொள்வனவு செய்வதற்காக, இன்று 25ஆம் திகதி அதிகாலை 5 மணிமுதல், அங்காடிகளில் மக்கள் நிரம்பிருந்தனர்.

தங்களுக்குத் தேவையான அளவுக்கு பொருள்களை கொள்வனவு செய்துக்கொண்டனர்.

ஆனால், வாகனங்களை அனுமதிக்காமையால், தங்களுடைய வாகனம் நிறுத்தப்பட்டிருக்கும் இடத்துக்கு தள்ளுவண்டியில் (வீல்பரோ) வைத்து பொருள்களை எடுத்துச் சென்றனர். அவ்வாறான வீடியோவுடன் கூடிய காட்சிகள், சமூக வலைத்தளங்களில் வைரலாகியிருந்தன.

இந்நிலையில், அவ்வாறு பொருள்களை தள்ளுவண்டியில் (வீல்பரோ) வைத்து தள்ளிச்சென்றவர், 25ஆம் திகதி இரவு கைது செய்யப்பட்டார். அளுத்கம, தர்ஹா நகரைச் சேர்ந்தவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

முகக் கவசம் அணியாத குற்றச்சாட்டிக் கீழே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## கொரோனா அலைக்குள்

# நளின் எம்.பியும் மனைவியும் விழுந்தனர்



ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார மற்றும் அவரது மனைவி ஆகியோருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

இதனையடுத்து, அவருடன் தொடர்பில் இருந்த, ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உள்ளாகுமாறு அறிவுறுத்தப்பட்டனர். தொடர்ச்சி P2

# ‘14 நாள்களுக்கு முன்னர் 2 நாள் குறித்து சிந்திக்க’



மக்களை நெருக்கடிக்குள் தள்ளும் தீர்மானங்களை எடுக்க வேண்டாமெனத் தெரிவிக்கும் ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன, மக்களின் பாதுகாப்புகளை கருத்திற்கொண்டு அரசாங்கம் தீர்மானங்களை எடுக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

“14 நாள்களுக்கு நாட்டை முடக்குவதற்கு முன்னர் பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்துகொள்ள இரண்டு நாள் கால அவகாசம் வழங்கப்பட்டிருக்க வேண்டும், அதேபோல, அரச ஊழியர்களின் சம்பளத்தை உரிய காலத்தில் வழங்கி, தொடர்ச்சி P2


# குடும்பத்துக்குள் அடிவாங்கும் ‘தலைவன்’

அமுல்படுத்தப்பட்டிருக்கும் பயணக்கட்டுப்பாடு காலப்பகுதியில், வீடுகளுக்குள் இடம்பெறும் குடும்பத் தகராறு காரணமாக, 150க்கும் மேற்பட்டவர்கள், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதில், பெரும்பாலானவர்கள் ஆண்களென அறியமுடிகிறது. அவ்வாறு அனுமதிக்கப்பட்டவர்களில் 112 பேர் குடும்பத் தலைவர்கள் என்றும், 42 பேர் பெண்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, தொடர்ச்சி P2

# நீராவி சுட்டத்தில் ஐவருக்கு எரிகாயம்



கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து தற்காத்துக்கொள்வதற்காக வீடுகளுக்குள்ளேயே பலரும் பல்வேறான கை வைத்தியங்களைச் செய்துகொள்கின்றனர். அதில், நீராவிப் பிடித்தல் முக்கியமானதாய் உள்ளது.

அவ்வாறு நீராவியைப் பிடிக்கும் போது, முகத்தில் ஏற்பட்ட எரிகாயம், தொடர்ச்சி P2

# ‘விதி முக்கியம்’

மகேஸ்வரி விஜயனந்தன்

கொரோனாவால் நாடு மிகவும் இக்கட்டான நிலைக்கு முகம்கொடுத்துள்ள நிலையில், அரசாங்கம் மற்றும் சுகாதார தரப்பினரால் அமுல்படுத்தப்படும் சட்டதிட்டங்கள், விதிமுறைகளைப் பின்பற்றிச் செயற்படுமாறு வேண்டுகோள் விடுத்த அமைச்சரும் அமைச்சரவை இணைப்பேச்சாளருமான ரமேஸ் பத்திரண, தொடர்ச்சி P2

## கரும்புகையுடன் பற்றி எரிகிறது ‘எக்ஸ்–பிரஸ் பேர்ல்’

# மிதப்பதை திறக்கவேண்டாம்

### இருவர் காயம்; 25 பேர் பாதுகாப்பாக மீட்பு

### கரையோர மீனவர்களுக்கு எச்சரிக்கை

### பதார்த்தத்தை விசிறி, தீயை அணைக்க முயற்சி



கொழும்புத் துறைமுகத்துக்கு வடமேல் திசையில் நங்கூரமிட்டுள்ள எக்ஸ் - பிரஸ் பேர்ல் கப்பலில் நேற்று (25) காலை சிறிய வெடிப்பொன்று ஏற்பட்டதை அடுத்து, அக்கப்பலில் மீண்டும் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது. தொடர்ச்சி P2

# காட்போட் வைத்தியர்கள் மூவர் கைது

தங்களுடைய கார்களில் வைத்தியருக்கான இலட்சினையை காட்சிப்படுத்திக்கொண்டு, பொலிஸ் சோதனைச் சாவடியிலிருந்து தப்பிச்செல்ல முயன்ற, போலி வைத்தியர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாரஹேன்பிட்டி, கருவாத்தோட்டம், கொழும்பு கோட்டை ஆகிய பகுதிகளில் வைத்தே, 39, 46, 28 வயதைச் சேர்ந்தவர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

வைத்தியருக்கான இலட்சினையுடன் வந்த கார்களை பொலிஸார் சோதித்துள்ளனர். அப்போது, தொடர்ச்சி P2

# ‘15 மில்லியன் தடுப்பூசி மருந்தை கொள்வனவு செய்ய அனுமதி’

மகேஸ்வரி விஜயனந்தன்



நாடுபூராகவும் வேகமாகப் பரவிவரும் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான 15 மில்லியன் தடுப்பூசி மருந்துகளை கொள்வனவு செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என அமைச்சரும் அமைச்சரவை இணைப்பேச்சாளருமான ரமேஸ் பத்திரண தெரிவித்தார்.

சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி முன்வைத்த யோசனைக்கே அங்கிகாரமளிக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சி P2

# ‘புர்கா அரேபியக் கலாசாரம்’



புர்கா அணிவது அரேபியக் கலாசாரமெனத் தெரிவித்த நீதி அமைச்சர் அலி சப்ரி, முஸ்லிம் சமூகமே இதனை சிந்தித்து புர்கா அணிவதை நிறுத்திக் கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தை நிறைவேற்றும்போது, அரசாங்கத்துக்கு பாராளுமன்றில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை இருந்தது. எனினும் அனைவரது கருத்துகளையும் கேட்டு நடுநிலைமையாகவே இதன்போது அரசாங்கம் செயற்பட்டது என்றார்.

மேலும், “இச்சட்டமூல வாக்கெடுப்பின்போது, எனது வாக்கையும் பாராளுமன்ற உறுப்பினர் ஜயரத்ன ஹேரத்தின் வாக்கையும் கணக்கில் எடுக்காது தவற விடப்பட்டுள்ளது” என்றார்.

தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துரைத்த அவர், தொடர்ச்சி P2



# நாவல் நகர் நனைந்தது

சீரற்ற வானிலையால், மண்சரிவு எச்சரிக்கை விடப்பட்டுள்ளதுடன், நேற்றுக்காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில், நாவலப்பிட்டியவில், அதிகூடிய மழைவீழ்ச்சியான 188.05 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## குடும்பத்துக்குள் அடிவாங்கும் தலைவன்

வீட்டு வன்முறைகளை அடுத்து, நபரொருவர் தன்னுயிரை மாய்த்துக்கொண்டுள்ளார் என்றும், அவருடைய சடலம், கொழும்பு தேசிய வைத்தியசாலையின் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது எனவும் வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கிண்ணியாவில் நல்லடக்கம்

திருகோணமலை மாவட்டத்தில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு மரணிப்பவர்களின் சடலங்களை இதுவரைக்கும் மட்டக்களப்பு, ஓட்டமாவடி பிரதேசத்துக்கு கொண்டு சென்று நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்நிலையில், திருகோணமலை மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றால் மரணிப்பவர்களின் உடல்களை, கிண்ணியா-மஹமாறு கிராமத்தில் நேற்றிலிருந்து நல்லடக்கம் செய்ய சுகாதார சேவைகள் பணியகம் அனுமதி வழங்கியுள்ளது.

திருகோணமலை மாவட்டச் செயலாளர் சமன் தர்ஷன் பாண்டிகோரளவின் ஆலோசனையின் பேரில், கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.கனியின் வேண்டுகோளுக்கிணங்க, திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் வீ.பிரேமானந் தலைமையிலான குழுவினர் மேற்படி இடத்தை ஏற்கெனவே பார்வையிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நீராவி சுட்டத்தில் ஐவருக்கு எரிகாயம்

சூடான நீர் ஊற்றப்பட்டிருக்கும் பாத்திரம் கவிழ்ந்து விழுந்துவிடல் ஆகியவற்றினால் ஏற்பட்ட எரிகாயங்களால், ஐவர் பாதிக்கப்பட்டு, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பை அண்மித்த பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்த வைத்திய அதிகாரியொருவர், "நீராவியை முகத்துக்கு பிடித்துக்கொள்ளும் போது, மிகக்கவனமான பாதுகாப்பு முறைமைகளை கையாளவேண்டும்" என்றார்.

## நாவல் நகர் நனைந்தது

இந்நிலையில், நுவரெலியா- எல்டன் தோட்டத்தில் 188 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், ஹட்டன் - நோர்டன் பகுதியில் 170 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, மேல், சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களிலும் 150 மில்லிமீற்றர் வரையில், பலத்த மழை பெய்யக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

# 'மாற்றுவழி யோசனை'

"மக்களின் நடமாட்டமே மாற்று வழிகள் தொடர்பில் யோசனை செய்வதற்கு தூண்டிவிட்டது, அதனடிப்படையிலேயே அடுத்தக் கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்" என்றார்.

அத்தியாவசியப் பொருள்களை மட்டும், நடமாடும் சேவைகளின் ஊடாக விநியோகிப்பதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பில் எதிர்காலத்தில் தீர்மானிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தங்களுக்கு அண்மையிலிருந்தும் வர்த்தக நிலையங்களுக்குச் சென்று, அத்தியவசியப் பொருள்களை கொள்வனவு செய்துகொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்ட போதிலும், மக்கள் அவற்றை கவனத்தில் கொள்வில்லை எனத் தெரிவித்த இராணுவத் தளபதி ஷவேந்திர சில்வா, இதுபோன்ற தவறான நடத்தைகளால் மக்கள் மோசமாக பாதிக்கப்படுவார்கள் என்றார்.

"அரசாங்கம், சுகாதாரத் துறையினர் மற்றும் படையினரின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றாமல் தான்தோன்றித்தனமாக மக்கள் நடந்துகொள்வது, கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை மென்மேலும் அதிகரிக்கும்" என்றும் எச்சரித்தார்.

## '14 நாள்களுக்கு முன்னர்...

வைத்திய நிபுணர்கள் கூறுவதுபோல நாட்டை முழுமையாக முடக்கினால் கொரோனா வைரஸ் நாட்டிலிருந்து ஒழியும்" என்றார்..

நிபுணர்களின் கருத்தை அரசாங்கம் கேட்காது செயற்பட்டால், நாட்டுக்குப் பெரும் பாதிப்பு ஏற்படுமெனவும் தெரிவித்த அவர், கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் அனர்த்தங்களில் உயிரிழந்தவர்களுக்கு 10 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது என்றார்.

ஊடகங்களுக்கு அறிக்கையொன்றை விடுத்துள்ள அவர், கொரோனா வைரஸ் நிலைமைகளால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர், மூவர் உயிரிழக்கும் நிலைமைக் காணப்படுவதாலேயே கொரோனாவால் உயிரிழப்பவர்களுக்கு 25 இலட்சம் ரூபாய் வழங்கப்பட வேண்டுமென ஐ.தே.க தெரிவிக்கிறது என குறிப்பிட்டுள்ளார்.

"அரச ஊழியர்கள், பொலிஸார் உட்பட பலர், கொரோனாவால் உயிரிழந்துள்ளனர். இவர்களுக்கு நட்டஈடாக 50 இலட்சம் ரூபாய் வழங்கப்பட வேண்டும்" என்றும் கோரியுள்ளார்.

நாட்டு மக்களை நெருக்கடிக்குள் தள்ளும் தீர்மானங்களை எடுக்காது, மக்களின் பாதுகாப்புக்களை கருத்திற்கொண்டு அரசாங்கம் தீர்மானங்களை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்ட அவர், புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் நாட்டில் எந்தவிதமான பண்டிகைகளும் கொண்டாட முடியாத நிலையில் காணப்படுகிறது என்றும் அவ்வறிக்கையின் ஊடாக தெரிவித்துள்ளார்.

## 'விதி முக்கியம்'

அவ்வாறு கட்டுபட்டு செயற்பட்டால் மாத்திரமே நாட்டை கொரோனா தொற்றிலிருந்து மீட்கலாம் என்றார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (25) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், பயணக்கட்டுப்பாடு மற்றும் வாகனங்களைப் பயன்படுத்துகின்றமை தொடர்பில் கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில், நேற்று முன்தினம் (24) கொழும்பு நகருக்குள் பாரிய வாகன நெரிசல் காணப்பட்டதாக சுட்டிக்காட்டிய அவர், எதிர்பார்க்கப்படும் ஒழுங்குமுறைகள் மற்றும் சுகாதாரப் பிரிவினர் எதிர்பார்க்கும் நோய் கட்டுபடுத்தல் தொடர்பில் அமுல்படுத்தப்படும் விதிமுறைகளைக் கடைப்பிடிக்குமாறு வேண்டுகோள் விடுப்பதாகத் தெரிவித்தார்.

"சகலருக்கும் கடனட்டைகள் மற்றும் ஏ.டி.எம் (தன்னியக்க அட்டைகள்) பயன்படுத்துவது உள்ளிட்ட விடயங்களில் சில அசௌகரியங்கள் ஏற்படும் எனினும், சகலரும் அர்ப்பணிப்புடன் செயற்படாவிட்டால், கொரோனா தொற்றை ஒழிப்பதில் சிக்கல்கள் ஏற்படும்" என்றார்.

மேலும் பயணக்கட்டுபாடு அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில், மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை குறைக்க அரசாங்கம் தலையீடு செய்யும் என தெரிவித்த அவர், இவ்வாறான சந்தர்ப்பங்களில் சகலரும் பாரிய அர்ப்பணிப்புகளை செய்வதாகத் தெரிவித்தார்.

கொரோனா 2ஆவது அலையால் மக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருள்களை விநியோகிக்கும் செயற்பாடு வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டாலும், நடமாடும் வாகனங்கள் ஊடாக வர்த்தக செயற்பாடுகளை முன்னெடுக்கும் வர்த்தகர்கள் இம்முறை தயக்கம் காட்டுவதாகத் தெரிவித்த அமைச்சர், பிரதேச ரீதியாக அதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட்டாலும் வர்த்தகர்கள் இந்த விடயத்தில் அக்கறையின்றி இருப்பதால், பிரதேச ரீதியில் தலா ஒரு கிராம சேவகர் பிரிவுக்கு நடமாடும் வர்த்தக நிலையங்கள் இரண்டை திறந்து அத்தியாவசிய பொருள்களை கொள்வனவு செய்யும் வசதியை ஏற்படுத்தியதாகவும் தெரிவித்தார்.

## காட்போட் வைத்தியர்கள் மூவர் கைது

தாங்கள் வைத்தியரெனக் கூறி, பொலிஸாருடன் அவர்கள் வாதம் செய்துள்ளனர்.

சந்தேகம் கொண்ட பொலிஸார், வைத்தியருக்கான ஆவணங்களைக் காண்பிக்குமாறு கேட்கவே, ஆவணங்கள் இன்மையால் அம்மூவரும் தடுமாறியுள்ளனர். அதன்பின்பே, அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

எனினும், "தாங்கள் ஒட்டிவந்த கார்கள், தங்களுடைய உறவினர்களுடையது என்றும், அவர்கள், வைத்தியத் துறையைச் சேர்ந்தவர்கள் என்றும் கைது செய்யப்பட்டவர்கள் பின்னர் ஒத்துக்கொண்டுள்ளனர்.

வைத்தியரின் இலட்சினையைப் பயன்படுத்தி, பயணக்கட்டுப்பாடுகளை மீறுவோர் தொடர்பில் பொலிஸார் அவதானமாக இருக்கவேண்டுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, மே 24ஆம் திகதியன்று பொலிஸாருக்கு பணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்கா அவசர அறிவிப்பு

எனவே, இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று அதிகரிப்பதால், "அமெரிக்கர்கள் இலங்கைக்கு பயணிக்க வேண்டாம்" என பயண அறுவுறுத்தல் வழிகாட்டி அறிக்கையை அமெரிக்க இராஜாங்க திணைக்களம் வெளியிட்டுள்ளது.

## நளின் எம்.பியும்...

இந்நிலையில், அவருடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தவராக அடையாளம் காணப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டாரவுக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில்,கொரோனா தொற்று உறுதியானது.

## '15 மில்லியன் தடுப்பூசி மருந்தை கொள்வனவு செய்ய அனுமதி'

இதில் 14 மில்லியன் சினோபார்ம் மருந்தும் ஒரு மில்லியன் அஸ்ட்ராஜெனெகா மருந்தும் கொள்வனவு செய்ய தீர்மானம் எடுக்கப்பட்டது என்றார். அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (25) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நாட்டின் சனத்தொகையில் 60- 70 சதவீதமானவர்களுக்கு இந்த வருடத்துக்குள் கட்டாயமாக தடுப்பூசி வழங்கப்படும். அதனோர் அங்கமாக, 15 மில்லியன் தடுப்பூசி மருந்துகளை கொள்வனவு செய்வதற்கான நிதி அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டுள்ளன" என்றார்.

"அந்த தடுப்பூசி மருந்துகளை, இலங்கைக்கு விரைவாக கொண்டு வர நடவடிக்கை எடுத்துள்ளோம். இதற்கமைய அடுத்த மாதம் இறுதிக்குள் அனைத்து தடுப்பூசிகளையும் முறையாக கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" என்றார்.

மேல் மாகாணத்துக்கு மேலதிகமாக எதிர்வரும் நாள்களில் குருநாகல், களுத்துறை, மாத்தறை, காலி உள்ளிட்ட மாவட்டங்களிலும் தொற்றாளர்கள் அதிகம் அடையாளம் காணப்படும் மாகாணங்களிலும் தடுப்பூசி செலுத்தும் செயற்றிட்டத்தை அரசாங்கம் முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளது என்றார்.

## 'மிதப்பதை திறக்கவேண்டாம்'

இதன்போது, இக்கப்பலை சேர்ந்த இந்தியர்கள் இருவர் காயங்களுடன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், கப்பலிலிருந்து 25 பேர், இலங்கைக் கடற்படையினரால் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர். .

"விமானப்படைக்குச் சொந்தமான பெல் -212 ரக விமானத்தை பயன்படுத்தி தீயைக் கட்டுப்படுத்த உலர் இரசாயன பதார்த்தம் விசிறப்பட்டது" என விமானப்படை பேச்சாளர் குரூப் கெப்டன் துஷான் விஜேதிலக தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கப்பலில் இருந்த இரசாயன கொள்கலன்கள் கடலில் கலந்துள்ளதால் மீனவர்கள் எச்சரிக்கையுடன் செயற்படுமாறு, மீன்பிடி மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர தனது டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளார். கொழும்பு, களுத்துறை மற்றும் நீர்கொழும்பு மீனவர்களுக்கே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார். கடலில் மிதக்கும் கொள்கலன்களை மீனவர்கள் அல்லது கரையோர வாழ் மக்கள் கண்டால், அங்கிருந்து ஒதுங்கி தகவல் வழங்குமாறும் அவர் மேலும் அறிவுறுத்தியுள்ளார்.

## 'புர்கா அரேபியக்...

தற்போதைய அரசாங்கம் புர்காவுக்கு தடை விதிக்கவில்லை. முஸ்லிம் சமூகம் ஏனைய சமூகங்களிடமிருந்து பிரிவதற்கு புர்காவும் ஒரு காரணமென கடந்த அரசாங்கம் கூறியது. கடந்த அரசாங்கத்தின் பரிந்துரையே தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்றார்.

புர்காவை நான், எதிர்க்கிறேன். இதனைக் கடந்த பத்து வருடங்களாகவே கூறிவருகிறேன். புர்காவுக்கு தடை விதிப்பதற்கு அப்பால் புர்கா அணியக் கூடாது. தனது மதத்தை மற்றொருவருக்குக் கொண்டு செல்வது முஸ்லிம்களுக்கு முக்கியமான ஒன்று. எனவே, இதற்கு ஏனையோருடன் முதலில் கலந்துரையாட வேண்டும். இதனை விடுத்து முகத்தை மூடிக்கொண்டு இருப்பது பயனற்றது எனவும் நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

புர்கா என்பது அரேபியக் கலாசாரம். இதனை சமூகம் என்றவகையில் முஸ்லிம் சமூகமே இதனை சிந்தித்து புர்காவ அணிவதை நிறுத்த வேண்டுமெனவும் தெரிவித்தார்.

## ஜி.எஸ் புறக்கணிப்பு

கிராம சேவகர்கள் (ஜி.எஸ்) பணிப்புறக்கணிப்பில் ஈடுபடபோவதாக அறிவித்துள்ளனர். இதனை, இலங்கை கிராம சேவகர்கள் சங்கம் உறுதிப்படுத்தியுள்ளது.

கொரோனா வைரஸ் தடுப்பூசிகளை செலுத்தும் சுகாதார அமைச்சின் செயற்பாடுகள் தமக்குக் கவலையளிப்பதாகவும் அறிவித்துள்ள அச்சங்கத்தின் தலைவர் சுமித் கொடிகார, அரசியல்வாதிகள் தங்களுக்கு நெருக்கமானவர்களுக்கு தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டனர் எனவும் தெரிவித்துள்ளார்.




> அரச வைத்திய அதிகாரிகள் நாட்டின் அதிகாரத்தைக் கையில் எடுத்துக்கொண்டுச் செயற்படுகிறது

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உறுப்பினர்களது குடும்பத்தினருக்கு மாத்திரம் தடுப்பூசிகள் வழங்கப்படுவதாகவும் கூறியுள்ளார்.

"கிராம சேகவர்கள், மாவட்ட செயலாளர்கள், சுகாதார ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் தடுப்பூசியை வழங்க நடவடிக்கை எடுக்கும் வரையில் பணிப்புறக்கணிப்பு தொடரும்" என தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சின் இச்செயற்பாடு கவலையளிப்பதாகத் தெரிவித்துள்ள அவர், அரச வைத்திய அதிகாரிகள் நாட்டின் அதிகாரத்தைக் கையில் எடுத்துக்கொண்டுச் செயற்படுகிறது என்றும் குற்றஞ்சுமத்தினார்.

மட்டக்களப்பில்

## 'ஆடைத்தொழிற்சாலை கொரோனா 42 ஆக அதிகரிப்பு'

கனகராசா சரவணன்

மட்டக்களப்பில் ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிந்துவரும் பணியாளர்களுக்கு செவ்வாய்க்கிழமை (25) அன்டிஜன் பரிசோதனையில் 10 பேருக்கு கொரோனா தொற்று இனங்காணப்பட்டது. இதனையடுத்து, ஆடைத் தொழிற்சாலையில், கொரோனா தொற்று 42 ஆக அதிகரித்துள்ளது .

"இதேவேளை கடந்த 24 மணித்தியாலயத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில், 3 பேர் மரணமடைந்துள்ளனர். 63 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது" என மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி நகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.


"மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இவரும் காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவர் உட்பட 3 பேர் மரணமடைந்துள்ளனர். இதையடுத்து மாவட்டத்தில் கொரோனாவினால் மரணித்தவர்களின் எண்ணிக்கை 25 ஆக அதிகரித்துள்ளது" என்றார்.

"காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் அதிகபட்சமாக 22 பேருக்கு தொற்று உறுதி கண்டறியப்பட்டுள்ளது. மட்டக்களப்பில் மூன்றாவது அலையில் 954 கொரோனா தொற்றாளர்கள் அடையாளங்காணப்பட்டனர். 14 பேர் மரணமடைந்துள்ளனர். கடந்த 7 நாள்களில் 425 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்" என்றார்.

அதேவேளை, ஆரையம்பதியிலுள்ள ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரிந்து விட்டு பஸ்வண்டியில் வீடு திரும்பியவர்களை வவுணதீவு பிரதேசத்தில் வைத்து பொது சுகாதார பரிசோதகர்கள், பஸ்வண்டியை நிறுத்தி அன்டிஜன் பரிசோதனைகளை மேற்கொண்டனர். அதில் 10 பேருக்கு தொற்று உறுதியானது. அத்துடன், அந்த ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் 42 பணியாளர்கள் கடந்த 14 நாள்களில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

"இருந்தபோதும் குறித்த ஆடைத் தொழிற்சாலைக்கு, துறைசார்ந்த வைத்தியர்கள் களவிஜயம் ஒன்றை மேற்கொண்டு அங்கு சுகாதார அமைச்சினால் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்ட சுற்று நிருபத்தின் படி அவர்கள் சுகாதார நடைமுறைகளை மேற்கொண்டுவருகின்றதாக ஆராந்ததுடன் மேலும் பல சுகாதார வழிமுறைகளை அவர்களுக்கு வழங்கியுள்ளோம்" என்றார்.

அதேவேளை, இங்கிருந்து கொரோனா கொத்தனி உருவாகாமல் இருப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.



# கொரோனா செய்தித் துளிகள்

இலங்கைக்கு 13 மில்லியன் ரூபாய் பெறுமதியான பி.சி.ஆர் இயந்திரமொன்றை அமெரிக்கா வழங்கியுள்ளது.

---

நாட்டில் நேற்று முன்தினம் (24) இனங்காணப்பட்டக் கொரோனா வைரஸ் தொற்றாளர்களில் அதிக எண்ணிக்கையிலான தொற்றாளர்கள் கொழும்பு மாவட்டத்திலேயே இனங்காணப்பட்டுள்ளனர்.

---

கொரோனா வைரஸ் ஒழிப்புப் பணிகளுக்காக அவுஸ்திரேலிய அரசாங்கம் இலங்கைக்கு 5.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது.

---

மாத்தளை மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை 57ஆக அதிகரித்துள்ளது.

---

PHI சங்கம்;

## பணிப்புறக்கணிப்பை கைவிட்டது

மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் கொரோனா வைரஸ் தடுப்புப் பணிகளிலிருந்து, இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் சங்கம் தற்காலிகமாக நேற்று (25) ஒருநாள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

வைத்தியர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு மாத்திரம் கொரோனா வைரஸ் தடுப்பூசியை செலுத்துவதற்கு சுகாதார அமைச்சு எடுத்திருந்த தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே இப்பணி புறக்கணிப்பை நேற்று முன்னெடுத்ததாக அச்சங்கத்தின் செயலாளர் மஹேந்திர பாலசூரிய தெரிவித்தார்.

வைத்தியர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு மாத்திரம் தடுப்பூசி செலுத்துவதற்கு சுகாதார அமைச்சு எடுத்திருக்கும் தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நேற்றுக் காலை 7.30 மணியிலிருந்து மாலை 4.30 மணி வரையில் மேல்மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் கொரோனா வைரஸ் தடுப்புப் பணிகளில் இருந்து விலகுவதற்கு தீர்மானிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை சுகாதார அமைச்சருடன் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் முன்னெடுத்தப் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து பணிப்புறக்கணிப்புக் கைவிடப்பட்டுள்ளதாக அச்சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார்.

## அதிசொகுசு வாகன இறக்குமதி யோசனை கைவிடப்பட்டது

மகேஸ்வரி விஜயனந்தன்

பாராளுமன்ற உறுப்பினர்களோ அமைச்சர்களோ வாகன இறக்குமதி தொடர்பில் எவ்வித கோரிக்கையையும் விடுக்கவில்லை எனத்தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ரமேஸ் பத்திரண, தேவையற்ற செலவைக் குறைக்கும் விடயத்தில் அமைச்சர்கள், ஜனாதிபதியை முன்மாதிரியாகக் கொண்டுள்ளனர் என்றார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (25) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், நாட்டின் இன்றைய நிலையில், வாகன இறக்குமதி குறித்து சிந்திக்க எவ்வாறு தோன்றியது என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே, அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் பிரதமர் அலுவலகத்தில் பிரதமரால் அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது. அதற்கமைய குறித்த வாகன இறக்குமதி செயற்பாடு முன்னெடுக்கப்படாது என்றும் பிரதமரின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன என்றார்

வாகன இறக்குமதியை நாம் கோரவில்லை. அர்ப்பணிப்புகளை நாம் செய்ய தயாராகவுள்ளோம் என தெரிவித்த அவர் பாரிய அர்ப்பணிப்பை செய்து சிறந்த முன்மாதிரியை ஜனாதிபதி கொடுத்துள்ளார் என்றார்.

# ‘எனது குடும்பத்துக்கு சேறு பூசாதீர்’



எனது குடும்பத்துக்கு சேறுபூசி, எனது பணிகளைச் செய்யவிடாது, இடையூறு செய்ய சிலர் முயற்சிப்பதாகத் தெரிவித்த நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால், தனக்கும் தனது குடும்பத்துக்கும் எதிராக மேற்கொள்ளப்படும் இதுபோன்ற சேறுபூசல்கள் கவலையளிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் விசேட அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கும் அவர்,

தனக்கும், தனது குடும்பத்துக்கும் திட்டமிட்டவகையில் சேறுபூசும் நடவடிக்கைகளை குழுவொன்று ஆரம்பித்துள்ளது. அத்தோடு, கொழும்புத் துறைமுக நகரின் நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டு வரும் நிறுவனமொன்றில் தனது மகன் சத்துர கப்ரால் வேலை செய்வதனாலேயே, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்துக்கு தான் ஆதரவாக வாக்களித்ததாக புதிய கருத்தொன்றை உருவாக்க முயல்வதாகவும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் பொறியியல் பட்டப்படிப்பை முடித்த சத்துர கப்ரால், 2016ஆம் ஆண்டு முதல் துறைமுக நகரத்தில் பணியாற்றி வருகின்றார். எந்தவிதமான அரசியல் அழுத்தங்களுமில்லாமல் இத்தொழிலை அவர் பெற்றதாகவும், இதேபோல தனது மகனுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட சகல குற்றச்சாட்டுக்களும் போலியானவை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் இவ்வறிக்கையில் தெரிவித்துள்ளார்.

எனது குடும்பத்துக்கு சேறுபூசி, எனது கவனத்தை வேறு திசைக்குத் திருப்பி, இடையூறு ஏற்படுத்தவே இவ்வாறான போலியான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற சேறுபூசும் செயற்பாடுகளை முன்னெடுப்பவர்களது அரசியல் வங்குரோத்து நிலையே வெளிப்படுவதாகவும், இதுபோன்ற சேறுபூசல்கள் கவலையளிப்பதாகவும் அஜித் நிவாட் கப்ரால் மேலும் தெரிவித்துள்ளார்.

# ‘பனை பாடநெறிகள் பல்கலைக்கழகத்துக்கு வர வேண்டும்’

பனை வளம் தொடர்பான பாடநெறிகளைப் பெருந்தோட்டப் பயிர்கள் தொடர்பான பல்கலைக்கழகப் பாடத் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட வேண்டுமென தெரிவிக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இதற்குத் தேவையான ஒத்துழைப்புக்களையும், ஆலோசனைகளையும் வழங்குவதற்குத் தான் தயாராக இருப்பதாகவும் அறிவித்துள்ளார்.

பெருந்தோட்ட பயிர்களுக்கான பல்கலைக்கழக வளாகம் அமைப்பது தொடர்பாக கல்வி அமைச்சர், பெருந்தோட்ட அமைச்சர் ஆகியோரின் இணைந்த அமைச்சரவைப் பத்திரம் தொடர்பில் அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டபோதே அமைச்சர் டக்ளஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலும் சுமார் ஒரு கோடியே பத்து இலட்சம் பனை மரங்கள் உள்ளன. இதில் 96 சதவீதமானவை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலேயே காணப்படுகின்றன எனத் தெரிவித்துள்ளார். நாட்டிலுள்ள பனை வளங்கள் முழுமையாகப் பயன்படுத்தும் பட்சத்தில் நாட்டின் பொருளாதாரத்துக்குத் தேவையான அந்நிய செலாவணியை கணிசமான அளவுப் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் தெரிவித்தார்.

எனினும் தற்போது வெறும் 20 சதவீதமான பனை வளங்களே பயன்படுத்தப்படுதாகவும் தெரிவித்த அவர்,

இளைஞர், யுவதிகளுக்கு இது தொடர்பான புரிதல் இன்மையே,இத்தொழில்களில் மக்களின் ஆர்வம் குறையக் காரணமென்றார்.

இதேவேளை, பனை வளம் தொடர்பான பாடநெறிகளை பல்கலைக்கழக பாடத்திட்டத்தினுள் உள்ளடக்கும் பட்சத்தில் பெருந்தோட்டப் பயிர்களை போன்றே கணிசமான பெருளாதார நன்மைகள் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் அமைச்சர் டக்ளஸ் இதன்போது தெரிவித்தார்.



வீடுகளில் தொற்றாளர்களை

# ‘அவதானமாக பராமரிக்கவும்’



கொரோனா வைரஸ் தொற்றாளர்களை வீடுகளில் வைத்துப் பராமரிப்பது என்பது பாரதூரமான விடயமெனத் தெரிவித்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்திய ஹேமந்த ஹேரத், இவர்கள் உரிய முறையில் தொற்றாளர்கள் பராமரிக்காவிடின் தொற்றாளர்களுக்கு உயிராபத்து ஏற்படுமெனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்திய ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதுத் தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி, சிறிய நோய் அறிகுறிகளைக் கொண்ட தொற்றாளர்கள் பலர் தங்களது வீடுகளிலேயே சிகிச்சைப் பெற்றுவதாகவும் தெரிவித்த வைத்திய ஹேமந்த ஹேரத், இந்தத் தொற்றாளர்களுக்குத் தேவையான வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். தொடர்ந்து அவர்களுடன் தொடர்பிலிருந்து தேவைப்படும் பட்சத்தில் தொற்றாளர்களை வைத்தியசாலைகளில் அனுமதிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தொற்றாளர்களைப் பராமரிப்பது என்பது ஆபத்தான ஒன்றெனவும் உரிய முறையில் அதனை செய்யவில்லை என்றால், தொற்றாளர்களுக்கு உயிராபத்து ஏற்படும் வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்தார்.


கட்டுவபிட்டியவில்

## அடி நீள முதலை

எம்.இஸட்.ஷாஜஹான்

நீர்கொழும்பு கட்டுவபிட்டிய பிரதேசத்தில் ஆறு அடி நீளமான முதலை ஒன்றை வடிகான் ஒன்றிலிருந்து பிரதேசவாசிகள் பிடித்துள்ளனர். அருகிலுள்ள

தெபா-எல வாவியிலிருந்து ஆறு அடி நீளமான முதலை வந்துள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர். திங்கள்கிழமை (24) இரவு இம்முதலையை பிடித்து வன ஜீவராசிகள் திணைக்களத்துக்கு அறிவித்ததாகவும் பிரதேசவாசிகள் மேலும் தெரிவித்தனர். இதேவேளை, நேற்றுக்காலை வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் முதலையை கொண்டு சென்றனர்.






# ஒக்சிசன் உபகரணங்களுடன் உயர் சிகிச்சைப் பிரிவுகள்

கொரோனா பரவலை கருத்திற்கொண்டு நாட்டிலுள்ள வைத்தியசாலைகளில் (Wall Oxygen ) ஒக்சிசன் உபகரணங்களுடன் கூடிய விசேட உயர் சிகிச்சைப் பிரிவை நிறுவுவதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் தெரிவிக்கப்பட்டது.

மேலும் அமைச்சரவைக் கூட்டத்தின் எட்டப்பட்ட சில தீர்மானங்கள் பற்றி மேலும் தெரிவிக்கையில் ;

கொரோனா தொற்றால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு, ஒட்சிசன் வழங்குவதை உறுதிப்படுத்துவதற்காக, மாகாண மட்டங்களில் அடையாளம் காணப்பட்டுள்ள 25 வைத்தியசாலைகளில் Wall Oxygen உபகரணங்களுடன் கூடிய விசேட உயர் சிகிச்சைப் பிரிவை (High Dependency Units) நிறுவுதல்.

ஒரு மாவட்டத்துக்கு 100 நடமாடும் மருத்துவ ஒட்சிசன் உற்பத்தி இயந்திரங்கள் வீதம் 25 மாவட்டங்களுக்கு 2500 இயந்திரங்களை வழங்கி, வைத்தியசாலைகளில் சிலிண்டர்களில் ஒட்சிஜன் வழங்கும் தேவையைக் குறைத்து,மருத்துவ ஒட்சிசனுக்கு அதிகரிக்கும் கேள்விக்கான விநியோகத்துக்காக மாதாந்தம் 1,20,000 லீற்றர்கள் திரவ ஒட்சிசனை கொள்வனவு செய்து, போதுமானளவு இருப்பை நாட்டில் பேணுதல் போன்ற திட்டங்களுக்கு சுகாதார அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

### புரிந்துணர்வு உடன்படிக்கை

திறந்த மற்றும் தொலைதூரக் கல்வி, தொடர்பாடல் தொழிநுட்பம் உள்ளிட்ட பல துறைகளில் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்காக இலங்கை திறந்த பல்கலைக்கழகம் மற்றும் தென்கொரியா திறந்த பல்கலைக்கழகங்களுக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்ள கல்வி அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

### சிறுநீரக நோய் சிகிச்சைப் பிரிவு

முல்லேரியாவில் உள்ள கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலையில், முழுமையான குருதிக் கூழ்மப்பிரிவு அலகு மற்றும் தொற்றல்லா நோய்களைக் கண்டறியும் வசதிகளுடனான நாள்பட்ட சிறுநீரக நோய் சிகிச்சைப் பிரிவை நிறுவுதல். இதற்கு சர்வதேச லயன்ஸ் கழகத்தின் மாவட்ட 306C 1 நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்றை செய்துகொள்ள சுகாதார அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

### சட்டம் திருத்தம்

தற்போது நடைமுறையிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் சில ஏற்பாடுகளை திருத்தம் செய்ய எரிசக்தி அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

### அதிவேக நெடுஞ்சாலை கட்டுமானம்

அத்துருகிரிய இடைமாறல் மற்றும் புதிய களனி பாலத்தையும் தொடர்புபடுத்தி தூண்களிலான அதிவேக நெடுஞ்சாலை கட்டுமான முதலீட்டு கருத்திட்டத்தை அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள பேச்சுவார்த்தை உடன்பாட்டு குழுவின் பரிந்துரைக்கமைய, நடைமுறைப்படுத்த சைனா ஹாபர் இன்ஜினியரிங் கோப்பரேசன் கம்பனிக்கு வழங்க நெடுஞ்சாலைகள் அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு அமைச்சசரவை அனுமதி வழங்கியுள்ளது.

## விபத்தொன்றில் 4 கைதிகள் காயம்

வாரியபொல சிறைசாலையிலிருந்து யாழ்ப்பாண சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்ற கொரோனா தொற்றுக்குள்ளான நான்கு கைதிகள் சென்ற வாகனம் விபத்துக்குள்ளானது.

இதில் பயணித்த நான்கு கைதிகளும் காயமடைந்துள்ளனர் எனகலேவல பொலிஸார் தெரிவித்தனர்.இவ்விபத்து தம்புள்ளை- கலேவல பிரதான வீதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

கட்டுப்பாடு தளர்த்தப்பட்டதும்

# கல்லடி பாலத்தில் வாகன நெரிசல்

வா.கிருஸ்ணா

நாட்டில் பயணக் கட்டுப்பாடு நேற்று தளர்த்தப்பட்டபோது, கல்லடி பாலம் ஊடாக மட்டக்களப்பு நகருக்கு அதிகளவான மக்கள் நுழைய முற்பட்டபோது, வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக பழைய பாலம் ஊடாக தேவையற்ற வகையில் மட்டக்களப்பு நகருக்கு பயணம் செய்தோர் திரும்பியனுப்பப்பட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அத்தியாவசிய தேவைகள் தவிர்ந்த ஏனைய தேவைகளுக்காக வெளியில் சென்றதன் காரணத்தினால் பொலிஸாரினால் மட்டக்களப்பு கல்லடி பாலம் மூடப்பட்டது.

இதேவேளை, அத்தியாவசிய பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு வீட்டில் இருந்து ஒருவர் மாத்திரமே வெளியில்செல்ல முடியும் என பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்திருந்தார்.

அவ்வாறு வெளிச்செல்பவர்கள் நடைதூரத்தில் உள்ள வர்த்தக நிலையத்துக்கு மாத்திரமே செல்ல முடியும் என அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில் பொலிஸாரின் அறிவுறுத்தல்களை மீறி மட்டக்களப்பில் மக்கள் செயற்பட்டமையானது எதிர்காலத்தில் கொரோனா அச்சுறுத்தல் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தலாமென சுகாதார துறையினர் எச்சரித்துள்ளனர்.

### இன்னும் ஓரிரு நாட்களில்

# ‘1,500 பி.சி.ஆர்’

■ சண்முகம் தவசீலன்



புதுக்குடியிருப்பு ஆடைத்தொழிற்சாலையுடன் தொடர்புடையவர்களில் 1,500 பேருக்கு இன்னும் ஓரிரு நாட்களில பிசிஆர் பரிசோதனை செய்ய வேண்டும் என, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மு.உமாசங்கர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில், நேற்று முன்தினம் (24) நடைபெற்ற கொரோனா தொடர்பான முக்கிய கலந்துரையாடலின் போதே, அவர் இதனை தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், ஆடைத்தொழிற்சாலையுடன் தொடர்புடைய கொரோனா தொற்றாளர்கள், முகாமில் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளனரெனவும் மீதியாக உள்ள 700 பேர் வரையில் பத்து நாட்கள் தனிமைப்படுத்தலில் வைத்திருக்கின்றோமெனவும் கூறினார்.

இதன் முடிவில் 700 பேருக்கும் பிசிஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளனவெனத் தெரிவித்த அவர், இன்னும் ஒரிரு நாட்களில் கிட்டத்தட்ட 1,500 பிசிஆர் பரிசோதனை செய்ய வேண்டுமெனவும் கூறினார்.

இதில் உள்ள சவால்கள் மிகவும் பெரியவை எனவும் அதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும், அவர் கூறினார்.

### பயணக் கட்டுப்பாடு தளர்வில்

# விலைகள் எகிறின

■ எம்.எஸ்.எம்.ஹனீபா, வா.கிருஸ்ணா, எம்.எம்.பர்ஸான், எம்.எஸ்.எம்.நூர்தீன், ஹஸ்பர் ஏ ஹலீம்

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைத் தடுக்கு முகமாக வெள்ளிக்கிழமை (21) இரவு 11 மணி தொடக்கம் விதிக்கப்பட்டிருந்த பயணத் தடை தற்காலிகமாக தளர்த்தப்பட்டதையடுத்து, நேற்று (25) கிழக்கு மாகாண மக்கள் அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்தனர்.

வீதியோர வியாபாரங்கள் தடைசெய்யப்பட்டிருந்தன. மரக்கறி விற்பனை நிலையங்கள், பல்பொருள் அங்காடிகள், பேக்கரிகள், மருந்தகங்கள் மற்றும் மீன் சந்தைகள் போன்றவை திறந்திருந்தன.

தங்களுக்குத் தேவையான பொருள்களை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி, சமூக இடைவெளியைப் பேணி பொதுமக்கள் கொள்வனவு செய்தனர்.



இதன்போது அரிசி, பருப்பு, சீனி, மரக்கறி மற்றும் மீன் போன்ற அத்தியாவசியப் பொருள்களின் விலைகள், வழமையை விடவும் அதிகரித்துக் காணப்பட்டதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

ஒரு வாரத்துக்கான அத்தியாவசியப் பொருள்களை வாங்கியே ஆக வேண்டும் என்ற நிலையில், நுகர்வோர் இருந்தனர். அதனால், இவ்வாறு விலைகளை அதிகரித்து விற்பனை செய்ததாகவும் வேறு வழியில்லாமல் தாம் பொருள்களை வாங்கி வந்ததாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, உணவுப் பொருட்களின் கட்டுப்பாட்டு விலையை கண்காணிப்பதற்கு பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் வர்த்தக நிலையங்களிலும் சந்தைகளிலும் கண்கானிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும், நேற்றையதினம் பொதுமக்கள் கடைபிடிக்கவேண்டிய போக்குவரத்து முறைகள் குறித்து அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், அதனை மீறுவோரை கண்டறியும் நடவடிக்கைகளை பொலிஸாரும் இராணுவத்தினரும் முன்னெடுத்தனர்.

இதன்போது தேவையற்ற முறையில் வெளியே வந்தோருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கும் நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்ததுடன், சிலர் கடுமையாக எச்சரிக்கப்பட்டு திருப்பி அனுப்பிவைக்கப்பட்டனர்.

### கோவிந்தன் கடை சந்தியில்

## ஆணின் சடலம் மீட்பு



■ மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி -திருவையாறு, வில்சன் வீதியைச் சேர்ந்த கே.ரமேஸ்குமார் (வயது 30), கோவிந்தன் கடைச் சந்தி, இரணைமடு நீர்ப்பாசன வாய்க்காலில் இருந்து, நேற்று (25) காலை, சடலமாக மீட்கப்பட்டார்.

தனியார் வீதி அபிவிருத்தி நிறுவனம் ஒன்றில் வீதி புனரமைப்பு பணியில் ஈடுபட்டுள்ள இவர், குளிப்பதற்காக வாய்க்காலில் நேற்று முன்தினம் (24) மாலை, இறங்கிய போது, நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கலாமென சந்தேகிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# ‘பாஸ் இரத்தாகும்’

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்



அதிகூடிய விலைக்கு மரக்கறி விற்பனைசெய்யப்பட்டால், பாஸ் (அனுமதி) இரத்து செய்யப்படுமென, மன்னார் மாவட்டச் செயலாளர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் தெரிவித்தார்.

மன்னார் - பஸார் பகுதியில் சில மரக்கறி விற்பனை நிலையங்களில் அதிகூடிய விலைக்கு மரக்கறி வகைகள் விற்பனை செய்யப்படுவது தொடர்பாக வினவிய போதே, அவர் இவ்வாறு தெரிவிதத்hர்.

மன்னாரில் சில மரக்கறி விற்பனை நிலையங்களில், அதிகூடிய விலைக்கு மரக்கறி விற்பனை செய்யப்படுவதாக முறைப்பாடு கிடைக்கப்பட்டுள்ளதென்றார்.

பொருட்களை கொள்வனவு செய்வதற்கு சென்று வருவதற்கான பாஸ் இரத்து செய்யப்படுமென்றும், அவர் எச்சரித்தார்.



## இன்பச் சோலை...

மட்டக்களப்பு, காத்தான்குடி பிரதான வீதியிலுள்ள ஈச்ச மரங்கள் காய்த்து பழமாகத் தொடங்கியுள்ளன. சுமார் 65 மரங்கள் இங்குள்ளதுடன், இந்த மரங்களை காத்தான்குடி நகர சபை பராமரித்து வருகின்றது.
(படங்கள் – எம்.எஸ்.எம்.நூர்தீன்)

## 3 மீனவர்களைத் தேடி வேட்டை

■ அப்துல்சலாம் யாசீம்

திருகோணமலை, திருக்கடலூர் பகுதியில் இருந்து கடலுக்கு ஞாயிற்றுக்கிழமை (23) படகில் சென்ற மீனவர்கள் மூவர் இதுவரை கரை திரும்பவில்லையென திருக்கடலூர் விபுலானந்தா கடற்றொழிலாளர் சங்கத்தின் தலைவர் தங்கவேலாயுதம் கமல் தெரிவித்தார்.

திருக்கடலூர் பகுதியைச் சேர்ந்த சஞ்சீவன் (வயது 21), ஜீவரெட்ணம் சரன்ராஜ் (வயது 34) மற்றும் சிவசுப்ரமணியம் நதுசன் (வயது 21) எனும் மீனவர்களே காணாமல்போயுள்ளனர்.




### கிளிநொச்சியில்

## கடைகளை மூடிய பொலிஸார்

■ மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி நகரில், நேற்றைய தினம் (25) திறக்கப்பட்ட வியாபார நிலையங்களில், அத்தியாவசிய வியாபார நிலையங்களை தவிர ஏனையவற்றை பொலிஸார் உடனடியாக மூடியுள்ளனர்.

நேற்றைய தினம் அதிகாலை, பயணத் தடை தளர்த்தப்பட்ட நிலையில், கிளிநொச்சி நகரில் பெரும்பாலான வியாபார நிலையங்கள் திறக்கப்பட்டிருந்தன.

பொதுமக்களும் வழமை போன்று நகருக்கு வருகை தந்திருந்தனர். ஆனால், அத்தியாவசியப் பொருட்கள் விற்பனை செய்யும் வியாபார நிலையங்களைத் தவிர ஏனையவற்றை திறப்பதற்கு தடை விதிக்கப்பட்மைக்கு அமைவாக கிளிநொச்சியில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### பயணத் தடை தளர்வு:

## யாழில் நெரிசல் அதிகரிப்பு

■ என்.ராஜ்



நாடளாவிய ரீதியில் விதிக்கப்பட்டிருந்த பயணத் தடை, நேற்றைய தினம் (25) தளர்த்தப்பட்ட நிலையில், யாழ். நகரப் பகுதியில் மக்கள் அதிகளவில் ஒன்றுகூடியதை அவதானிக்க முடிந்தது.

இதன் காரணமாக, யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் சனநெரிசலையும் போக்குவரத்து நெரிசலையும் கட்டுப்படுத்தும் முகமாக, இராணுவத்தினர் களத்தில் இறக்கப்பட்டுள்ளனர்.

இதன்போது, போக்குவரத்து கண்காணிப்பு நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டனர்.

### தாழ்வுபாடு கடற்கரையில்

## உருக்குலைந்த சடலம்

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்



பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து, மன்னார் - தாழ்வுபாடு கடற்கரையை அண்மித்த கடற்கரை பகுதியிலிருந்து, உருக்குலைந்த நிலையில் சடலமொன்று நேற்று முன்தினம் (24) மாலை மீட்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், வைத்திய அதிகாரி, நேற்று (25) காலை சடலத்தை பார்வையிட்டதோடு, உடற்கூற்று பரிசோதனை மேற்கொள்வதற்கு, மன்னார் வைத்தியசாலையில் சடலத்தை ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார்.

இதேவேளை, அடையாளம் காணப்படாத சடலம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

## திறந்த கடைக்கு உடன் பூட்டு




■ எஸ்.எம். இர்ஷாத்

அம்பாறை, அக்கரைப்பற்று மாநகர சபைக்கு உட்பட்ட பட்டினப்பள்ளி பகுதியில் சிற்றுண்டிச்சாலையொன்று, சுகாதார அதிகாரிகளின் அனுமதியின்றி, நேற்று (25) காலை திறக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தகவலறிந்த அப்பகுதி சுகாதார வைத்திய அதிகாரி எப்.எம்.ஏ காதர் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், திடீரென்று அங்கு விஜயம் செய்து சிற்றுண்டிச்சாலையை உடன் மூடினர்.

அங்கிருந்தவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனைகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அத்துடன் சிற்றுண்டிச்சாலையை திறந்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுக்கவும் நடவடிக்கை எடுத்தனர்.

## தோப்பூரில் தளர்த்தல் தணிக்கை



■ தீஷான் அஹமட்

நாடளாவிய ரீதியில் பயணக்கட்டுப்பாடு தளர்த்தப்பட்டிருந்த போதிலும் தோப்பூர் பிரதேசத்தில் உள்ள சகல வர்த்தக நிலையங்களும் நேற்றைய தினம் (25) மூடப்பட்டிருந்தன.

தோப்பூரில் கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்த வேண்டுமென்பதற்காக மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் நடைபெற்ற தோப்பூர் கொரோனா தடுப்புச் செயலணியின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமையவே, தோப்பூரில் வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டன.

தோப்பூர் அனைத்துப் பள்ளிவாசல் சம்மேளனம், ஜம்மியத்துல் உலமா, வர்த்தக சங்கம் மற்றும் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் மேற்படி கலந்துகொண்டு கடைகளை மூடுவதற்கு கூட்டாகத் தீர்மானித்திருந்தனர்.

### மன்னாரில்

## அதிக விலைக்கு மரக்கறி விற்பனை

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்



மன்னார் - பஸார் பகுதியில் உள்ள சில மரக்கறி விற்பனை நிலையங்களில், அதிகூடிய விலைக்கு மரக்கறி வகைகள் விற்பனை செய்யப்பட்டதாக, நுகர்வோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

விதிக்கப்பட்டிருந்த பயணத் தடை, நேற்று (25) தளர்த்தப்பட்ட நிலையில், குறிப்பிட்டளவு மரக்கறி விற்பனை நிலையங்களே திறக்கப்பட்டிருந்தன.

இருந்த போதும், ஒவ்வொரு மரக்கறி விற்பனை நிலையங்களிலும் நூற்றுக்கணக்கான நுகர்வோர் ஒரே நேரத்தில் பொருட்களை கொள்வனவு செய்யவதை காணமுடிந்தது.

இதன்போது, சில விற்பனை நிலையங்களில், கூடிய விலைக்கு மரக்கறி வகைகள விற்பனை செய்யப்பட்டுள்ளதாக, நுகர்வோர் தெரிவித்தனர்.

அதாவது, ஒரு கிலோகிராம் மரக்கறி 300 ரூபாய் முதல் 350 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, இவ்விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகள் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு, மரக்கறி வகைகளை கட்டுப்பாட்டு விலையில் விற்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும், நுகர்வோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### காத்தான்குடி நகர சபையின்

## உறுப்பினர் தப்பினார்: தவிசாளர் சிக்கினார்

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்




காத்தான்குடி நகர சபை உறுப்பினர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து, காத்தான்குடி நகர சபை தவிசாளர் உட்பட சில உறுப்பினர்களுக்கு அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாக காத்தான்குடி சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேற்படி உறுப்பினர், தானாக முன்வந்து அன்டிஜன் பரிசோதனையை மேற்கொண்டுள்ளார். இதன்போது அவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதையடுத்து இவரது மனைவி மற்றும் பிள்ளைகளுக்கும் அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட போது, அவர்களுக்கு தொற்று இல்லையென உறுதிப்படுத்தப்பட்டது.

அத்துடன், காத்தான்குடி நகர சபைத் தவிசாளர் எஸ்.எச்.அஸ்பர் உட்பட சில உறுப்பினர்களுக்கு அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட போது, அவர்கள் எவருக்கும் தொற்று இல்லையென உறுதிப்படுத்தப்பட்டதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதேவேளை, ஏனைய உறுப்பினர்களுக்கும் அன்டிஜன் பரிசோதனையை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் சுகாதார அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.





# மலையகத்தில் அடை மழை

## நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறப்பு தாழ் நில பிரதேங்கள் நீரில் மூழ்கின

■ *மலையக, நிருபர்கள்*

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற வானிலையால், மத்திய மாகாணம் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் கடந்த சில தினங்களாக அடை மழை பெய்துவருவதுடன். அங்குள்ள நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளதுடன், ஆறுகளின் நீர்மட்டமும் அதிகரித்து வருகின்றது.

இதற்கமைய,மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான்கதவுகள் இரண்டு நேற்று (25) அதிகாலை திறக்கப்பட்டுள்ளதுடன், ஆறுகளை அண்மித்து குடியிருப்பவர்கள் அவதானமாக இருக்கமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் லக்ஸபான, கெனியன், விமலசுரேந்திர மற்றும் நவ லக்ஸபான ஆகிய நீர்த்தேக்கங்களின் வான்கதவுகளும் திறக்கப்பட்டுள்ள நிலையில், கெசல்கமுவ ஓயா ஆறு பெருக்கெடுத்ததால் பொகவந்தலாவ- டின்சின் பகுதியில் உள்ள மரக்கறி தோட்டங்கள் நீரில் மூழ்கின.

மேலும், இரத்தினபுரி நகரை அண்மித்த வெரலுப்ப, கெட்டியம்பல,எலபாத, கிரியுல்ல ஆகிய தாழ்நில பிரதேசங்கள் நீரில் மூழ்கியுள்ளதுடன், மழை தொடர்ச்சியாக பெய்யுமானால் குறித்த பிரதேசங்களில் மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## கொரோனா செய்தித் துளிகள்

மொனராகலை பிரதேசத்துக்குப் பொறுப்பான உதவி பொலிஸ் அதிகாரியொருவருக்கு கொரோனா தொற்று உறுதியாது. ((சுமணசிறி குணதிலக)

---

மொனராகலை மாவட்டத்தின் 319 கிராம உத்தியோத்தர் பிரிவுகளுக்கும் 316 கொரோனா ஒழிப்புக் குழுக்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (சுமணசிறி குணதிலக)

---

அம்பகமுவ பிரதேச சுகாதார பிரிவுக்குட்பட்ட வட்டவளை- வெலிஓயா மற்றும் லொனக் ஆகிய தோட்டங்களில் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதையடுத்து, நேற்று (25) தொடக்கம் குறித்த இரு தோட்டங்களும் தனிமைப்படுத்தப்பட்டன. (சுதத்.எச்.எம்.ஹேவா)

---

மாத்தளையில் நேற்று (25) வரை 57 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளதுடன், இதுவரை 3,791 பேர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். (மஹேஸ் கீர்த்திரத்ன)

---

நாவுல பிரதேச சபையின் பெண் உறுப்பினர் ஒருவருக்கு கொறொனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (இந்திக அருணகுமார)

---

முடக்கப்பட்டுள்ள தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிலையம் மற்றும் சென்கூம்ஸ் தோட்டத்தில் மேலும் 26 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. (எம்.கிருஸ்ணா)

### தேசிய பாடசாலைகளாக

## 114 பாடசாலைகள் தரமுயர்வு

■ *மஹேஸ் கீர்த்திரத்ன*



1,000 தேசிய பாடசாலைகள் செயற்றிட்டத்தின் கீழ், மத்திய மாகாணத்தில், 114 பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்டுள்ளதாக மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித். யூ.கமகே தெரிவித்தார்.

'அனைவருக்கும் சமனான கல்வி' என்ற ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனத்துக்கு அமைய, சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் தலா 3 பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டதென்றார்.

### பதுளை பொது வைத்தியசாலைக்கு

## பி.சி.ஆர் இயந்திரம் வழங்கிவைப்பு

■ *சுமணசிறி குணதிலக*



ஊவா மாகாண சபை மூலம், பதுளை பொது வைத்தியசாலைக்கு பி.சிஆர் இயந்திரமொன்று வழங்கப்பட்டுள்ளது.

ஊவா மாகாண சபையின் நிதியத்திலிருந்து 4.8 மில்லியன் ரூபாய் செலவில் இவ் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

பதுளை பொது வைத்தியசாலையில் போதுமானளவு இயந்திரங்கள் இன்மையை சுட்டிக்காட்டி, பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக விடுத்த கோரிக்கைக்கு அமைய, ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில்லின் அனுமதியுடன் இந்த பி.சி. ஆர் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

### வெள்ளம் தேங்கி நிற்பதால்

## இரத்தினபுரியில் டெங்கு பரவும் அபாயம்

■ *ஏ.ஏ.எம்.பாயிஸ்*

இரத்தினபுரி மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக சில தாழ் நிலங்களில் வெள்ள நீர் தேங்கி நிற்பதால், இப்பகுதியில் டெ ங்கு நோய் பரவும் அச்சுறுத்தல் நிலை ஏற்பட்டுள்ளதாக ஒரு சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக சப்ரகமுவ மாகாண சுகாதாரத் திணைக்களக் காரியாலயம் பொதுச் சகாதார அலுவலகங்கள், ஏனைய வைத்திய நிலையங்கள், சுகாதாரப் பிரிவுகள் மூலம் அப்பிரதேச மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

எனவே, டெங்குத் தொற்றுடன் ஏனைய தொற்று நோய்களும் பரவும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால், பொதுமக்கள் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி விழிப்புடன் இருக்குமாறும் கொதித்தாறிய நீரை அருந்தமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

### உத்தியோகத்தர் தாக்கப்பட்டமைக்கு எதிராக

## பொகவந்தலாவையில் ஆர்ப்பாட்டம்

■ *எஸ்.சதீஸ்*

மடுல்சீமை தேயிலை பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் இயங்கும் பொகவந்தலாவ கெர்க்கஸ்வோல்ட் மேல்பிரிவு தோட்ட வெளிக்கள உத்தியோகத்தர் ஒருவர் தாக்கப்பட்டமையைக் கண்டித்து, நேற்று (25) ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி, தோட்ட உத்தியோகத்தர்களால் இவ் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 22ஆம் திகதி, கடையில் இருந்த வெளிக்கள உத்தியோகத்தரை குறித்த தோட்டத்தைச் சேர்ந்த கங்காணி ஒருவர் கையில் வைத்திருந்த குடையால் கடுமையாக தாக்கியுள்ளார்.

எனவே, தோட்டஅதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் தொழிலாளர்களால் தாக்கப்படுகின்ற சம்பவங்கள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றமையால், இது தொடர்பில் உரிய நடவடிவடிக்கை எடுக்க வேண்டுமென தெரிவித்து, இவ் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.



### பயணக் கட்டுப்பாடு தளர்விலும்

## பதுளை நகருக்கு மக்கள் வரவில்லை

■ *பாலித ஆரியவன்ஸ*

நாடுபூராகவும் அமுல்படுத்தப்பட்டுள்ள பயணக் கட்டுபாடு நேற்று (25) அதிகாலை 4 மணியளவில் தளர்த்தப்பட்டாலும் பதுளை நகரத்துக்கு வருகைத் தரும் மக்களின் எண்ணிக்கை குறைவாகவே காணப்பட்டது.

பதுளை நகருக்குள் நுழையும் சகல வீதிகளிலும் பொலிஸ் பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்பட்டு, சோதனை நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருந்ததுடன், சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றாத வாகனங்கள், நபர்கள் திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.மேலும் மோட்டார் சைக்கிள்களில் பொலிஸார் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டிருந்த நிலையில், அத்தியாவசிய தேவைக்கான வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டிருந்தாலும் வர்த்தக நிலையங்கள் பல வெறிச்சோடியே காணப்பட்டன.

### ஓராண்டுக்கு முன்னர் சரிந்த

# ஓர் ஆலமரம்



ஆ.ரமேஸ்
ramesarumukam@gmail.com

**'ஒருமுகமல்ல, இருமுகமல்ல ஆறுமுகம்; ஓர் ஆலமரம் சாய்ந்ததே, அதன் ஆயுளிலே வீழ்ந்ததே'**

என்ற வரிகள் இன்றைக்கு ஓராண்டுக்கு முன்னர், மலையகமெங்கும் ஒலிக்க விடப்பட்டு, மக்களின் கண்களில் கண்ணீரைக் குளமாய் கட்டியிருந்தது.

தங்களுக் எதிரான அடாவடித்தனங்களின் போதெல்லாம், 'தம்பி சேர்' இருக்கிறார் என்ற தென்புடன், புளகாங்கிதத்துடன் வாழ்ந்த மலையக மக்களின் வாழ்க்கையில், அந்நாள் இருண்ட நாளெனக் கூறுவதில் தவறில்லை.

நேர்மை, தட்டிக்கேட்டல், தட்டிக்கொடுத்தல், இராஜதந்திரம் இவை எல்லாவற்றிலுமே கைதேர்ந்து, அரசியல் காய்களை, மிகச் சரியாகவும் சாதுரியமாகவும் நகர்த்தும் வல்லமையைக் கொண்டிருந்த பெருந்தலைவர் அமரர் ஆறுமுகன் தொண்டமான் ஆவார்.

'தம்பி சேர்', எம்மையெல்லாம் விட்டு மறைந்து, இன்றுடன் (மே 26) ஓராண்டு நிறைவடைந்துவிட்டது என்பதை, நினைத்துக் கூடப் பார்க்கமுடியாத அளவுக்கு, அவருடைய செயற்பாடுகளின் நினைவலைகள் எம் கண்முன்னே ஓடிக்கொண்டிருக்கின்றன.

கம்பீரமான தோற்றம்; தலைமைத்துவப் பண்பை வெளிக்காட்டும் வீறுகொண்டநடை; தன்னைச் சுற்றி எம்.பிகள் பரிவாரங்களுடன் சபைக்குள் (பாராளுமன்றத்துக்குள்) வந்து, மிரட்டிவிட்டுச் செல்லும் திமிரான நடை உள்ளிட்ட காட்சிகள், இன்றுமே கண்களை விட்டகலவில்லை.

தனக்குக் கீழிருந்தவர்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுத்து, பதவிகளைப் பெற்றுக்கொடுத்தமையால், அவர்களில் பலர், ஆறுமுகன் தொண்டமானை இடைநடுவில் கைவிட்டுச் சென்றுவிட்டனர். அத்தனை துரோகங்களை எல்லாம் தாங்கி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்ற விருட்சத்தைக் கட்டிக்காத்த மாமனிதர் அவராவரார்.

ஊடகங்களை இலகுவில் சந்திக்கமாட்டார். சந்தித்தாலும் அவரது இராஜதந்திர ரீதியிலான பதில்கள், சிரிக்காதவர்களைக் கூட சிரிக்கவைத்துவிடும். இப்படிதான் சம்பள உயர்வு கூட்டொப்பந்த பேச்சுக்குப் பின்னர், ஊடகங்களை ஆறுமுகன் தொண்டமான் ஒருமுறை சந்தித்தார். உதாரணங்கள் பலவிருந்தாலும், அதில் சிலவற்றைத் தருகின்றோம்.

"நீங்கள் கேட்கும் தொகையை விடக் கூடுதலான தொகையைப் பெற்றுக்கொடுக்கலாம் என, மாற்றுத் தரப்பினர் கூறுகின்றனரே?" எனக் கேட்டதற்கு, "அப்படியானால், அவர்களை வாங்கி கொடுக்கச் சொல்லு" என முகத்தில் அறைந்தாற் போல பதிலளித்திருந்தார்.

மலையகத்தில் புதிய கூட்டணியொன்று அமைக்கப்பட்டதன் பின்னர், அதன் ஆயுட்காலம் தொடர்பில் வினவப்பட்ட போது, "இப்பதான் புள்ள பொறந்திருக்கு" என மக்களின் மனங்களை சுண்டியிழுக்கும் பதில்களை, பட் படென அளிப்பதில் ஆறுமுகன் தொண்டமானுக்கு நிகர் ஆறுமுகன் தொண்டமானே! ஆக, மக்களுக்கு புரியும் மொழியை பேசும் தலைவன் அவராவார்.

வழிபாடுகள் செய்வதையும் மதத்தலங்களுக்குச் செல்வதையும் வழக்கமாக கொண்டிருக்கும் ஆறுமுகன் தொண்டமான், ஐயப்பன் சுவாமிக்கு மலை அணிந்துகொண்டால், அதற்கே உண்டான பக்தியும் அவரிடத்தில் குடிகொண்டுவிடும். அவரிடமிருந்த பண்புகளை இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம்.

மலையகம் வாழ், ஒட்டு மொத்த இந்திய வம்சாவளி மக்களின் ஏகோபித்த சங்கமான இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பெருந் தலைவரும் மலையகத் தந்தையென போற்றப்பட்டவருமான சௌமிய மூர்த்தி தொண்டமானின் (ஐயா) வாரிசு வழி வந்த தலைவர் அமரர் ஆறுமுகம் ஆவார்.

'மலையகத் தந்தை'யென போற்றப்படுபவரான சௌமியமூர்த்தி தொண்டமானின் பேரன்தான் அமரர் ஆறுமுகம் தொண்டமான். 1964ஆம் ஆண்டு மே மாதம் 29ஆம் திகதி பிறந்த அமரர் ஆறுமுகன் தொண்டமான், தமிழகத்தின் ஏற்காட்டில் பள்ளிப் படிப்பையும் கொழும்பு ரோயல் கல்லூரியில், கல்லூரிப் படிப்பையும் பயின்றுள்ளார்.

1990ஆம் ஆண்டு முதல், இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் இணைந்து, அரசியலில் காலடி எடுத்துவைத்து, தனது தாத்தாவின் வழியில் பயணித்தார்.

1993ஆம் ஆண்டு, காங்கிரஸின் நிதிச் செயலாளராகவும், 1994ஆம் ஆண்டு கட்சியின் பொதுச் செயலாளராகவும் பதவி வகித்தார்.

1994 ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் 74,000 வாக்குகளைப் பெற்று பிரமாண்ட வெற்றியுடன் பாராளுமன்றம் சென்றார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஸ்தாபக தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானின் மறைவுக்குப் பின்னர், 1999ஆம் ஆண்டு காங்கிரஸின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

அதன் பின்னர், 2000, 2004 தேர்தல்களில் தொடர்ச்சியாக வெற்றி பெற்றார். தொடர்ந்து, தோட்ட உட்கட்ட மைப்பு அபிவிருத்தி அமைச்சராகவும் சமூக வலுவூட்டல், கால்நடை அபிவிருத்தி அமைச்சராகவும் பதவி வகித்துவந்தார்.

தமிழக அரசியல்வாதிகள் பலருடன் மிகவும் நெருக்கமான நட்பைப் பேணி வந்தவர் ஆறுமுகன் தொண்டமான். 2010ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்திருந்த தமிழக பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவை மலையகத்துக்கும் அழைத்துச்சென்று, தோட்டத் தொழிலாளர்களைச் சந்திக்க ஏற்பாடுகளைச் செய்தார்.

இந்திய அரசாங்கம் வழங்கிய முதற்கட்ட 4,000 தனி வீட்டுத் திட்டத்துக்குச் சிபார்சு பெற்றவரும், மூவாயிரம் ஆசிரியர்கள் நியமனம், உள்ளிட்ட அரசாங்கத் தொழில்களில் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளை இணைக்க சிபாரிசு பெற்றவரும் இவர்தான்.

இலங்கைக்கான இந்திய தூதுவராக பதவியேற்ற கோபால் பால்கேயை, 2020 மே 26 அன்று சந்தித்து, மலையக சமூக அபிவிருத்தி, இருதரப்பு ஒத்துழைப்பு, தோட்டத் தொழிலாளர்களுக்கான வீடமைப்பு ஆகியன தொடர்பாகக் கலந்துரையாடி விட்டுத் திரும்பியுள்ளார்.

அதன்பின்னர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இல்லத்துக்குச் சென்று, தோட்டத் தொழிலாளர்களின் ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வு விடயத்தையும் நடைபெறவிருந்த பாராளுமன்ற தேர்தல் தொடர்பிலும் கலந்துரையாடிவிட்டு கொழும்பில் உள்ள அவரது வீட்டுக்குச் சென்றுள்ளார்.

வீட்டில், தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்தபோது, மாரடைப்பு ஏற்பட்டு சரிந்து விழுந்துள்ளார். தலங்கம மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், சிகிச்சை பலனின்றி அன்றிரவு ஒன்பது மணியளவில் உயிரிழந்தார். இறுதிச் சடங்குகள் நோர்வூட் மைதானத்தில் மே 31ஆம் திகதி நடைபெற்றன.

மனதுக்கு பிடித்த தலைவர்; அவருக்குப் பிடித்தவர்கள் எவராக இருந்தாலும் தோளில் கைபோட்டு அரவனைத்து, தன்னருகில் வைத்து வளர்த்தெடுப்பவர். அவரின் பேச்சு சுருக்கமானது; செயல்கள் பரந்து காணப்படும்; சொல்லுக்கும் செயலுக்கும் மாறாக, எவர் செயற்பட்டாலும் இவருக்கு வரும் கோபம் சொல்லில் அடங்காதது.

வறியவர்கள், செல்வந்தர்கள் என்ற ஏற்ற தாழ்வு இவரிடத்தில் காணப்பட்டதில்லை. அனைவரின் அன்புக்கும் அடிமையானவர்; அடங்காதவர்களை அடக்கும் ஆற்றல் இவரிடத்தில் உண்டு.

எதற்கும் எவருக்கும் சளைத்தவர் இல்லை, தொழிலாளர்களுக்கோ சமூகத்துக்கோ ஏதேனும் பிரச்சினைகளை அதிகாரிகள் கொடுத்தால், சொல்லூடாகத் தண்டிப்பார்; மீறும் பட்சத்தில், வார்த்தைகள் மௌனமாகும்.

சிறுவர்கள் மீது அதீத அன்பு கொண்டவர். அவர்களுடன் ஆடிப்பாட ஆசைப்படுவார். அதிக இரக்க குணம் இவரிடத்தில் உண்டு. கல்விக்கு முதலிடம் வழங்குவார். தொழிலாளர், பெண்கள் ஆகியோருக்கு கண்ணியமான மரியாதை வழங்குவார்; சகஜமாக பேசிப் பழகக் கூடியவர்.

பொல்லாங்கு, புறம் பேசுபவர்களைப் பிடிக்காது; தனக்கு எது சரியென்று படுகிறதோ, அதைச் சட்டென்று செய்துவிடுவார். இவர் பிரிந்து ஆண்டுகள் ஒன்றானாலும், அனைவரினதும் மனதிலும் கொலுவீற்றிருக்கும் தலைவராக இடம்பிடித்து விட்டார்.



# கட்டுப்பாடுகளுக்குக் கட்டுப்படாவிடின் கட்டுக்குள் அடக்க வேண்டும்

ஒவ்வொரு பாடசாலைகளிலும் ஒழுக்கம் கற்பிக்கப்படும்; சில பாடசாலைகளில், மிகக் கடுமையாகப் பின்பற்றப்படும். அதனால்தான், கட்டுப்பாடுகளை மீறும் சந்தர்ப்பங்களில், எந்தப் பள்ளிக்கூடத்துக்கு சென்றானோ என மனதுக்குள்ளே கேள்வியெழுப்பிக்கொள்ளும் முதியோர், பள்ளிக்கூடத்துக்கே செல்லவில்லையென ஒரு முடிவுக்கு வந்துவிடுவர்.

கட்டுப்பாடுகளுக்குக் கட்டுப்பட வேண்டியது, சகலரினதும் கடப்பாடாகும்., கட்டுப்படாது, கட்டுக்கடங்காமல் செல்லும்போது, சட்டங்களை இறுக்கவேண்டிய நிலைமையே ஏற்படும், தலைக்கனத்துடன் சிலர் செய்யும் காரணங்களுக்காக, அனைவரும் பலிக்கடாவாக வேண்டிய நிலைமைக்குள் தள்ளப்பட்டு விடுகின்றனர்.

நாட்டை இயங்கும் நிலையில் வைத்துக்கொண்டே, கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் செயற்றிடங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அவற்றுக்கு ஒத்துழைப்பு நல்கவேண்டியது, கட்டுக்கோப்புடன் வாழும் ஒவ்வொரினதும் கடப்பாடாகும்.

தளர்த்தப்பட்ட பயணக் கட்டுப்பாடுகள், 25ஆம் திகதி இரவு 11 மணியுடன் மீண்டும் அமுலாகியுள்ளன. மே.31, ஜூன்.4, ஜூன்.7 ஆம் திகதிகளிலும் இவ்வாறே தளர்த்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. முதல்நாளான நேற்று (25) ஒருசிலர் நடந்துகொண்ட விதங்கள் முகங்சுளிக்கச் செய்துள்ளன.

உணவுக் கட்டுப்பாடு, தரக்கட்டுப்பாடு, மாசுக் கட்டுப்பாடு, மனக் கட்டுப்பாடு, உடையில் கட்டுப்பாடு, ஔடதங்களில் தரக் கட்டுப்பாடு என, கட்டுப்பாடுகளை வகைப்படுத்திக்கொண்டே போகலாம். ஆனாலும் அமுல்படுத்தப்பட்டது பயணக்கட்டுப்பாடாகும்.

கொரோனா வைரஸின் மூன்றாவது அலைக்குப் பின்னர், பயணக்கட்டுப்பாடுகள் ஓரளவுக்கு கடுமையாக்கப்பட்டுள்ளன. முதலாவது அலையில் முழுநாடும் முடக்கப்பட்டது, கொரோனா நிவாரணங்களும் வழங்கப்பட்டன, அந்த அலையிலிருந்து தப்பி மீண்டெழுந்து, மூன்றாவது அலைக்குள் தெரிந்தே விழுந்து சிக்கித்தவிக்கின்றோம்.

திட்டமிட்டு, சரியான கட்டளைகளைப் பிறப்பிப்பது அரசாங்கத்தின் கடப்பாடு, அதனை மதித்துச் செயற்படவேண்டியது மக்களின் தார்மிக கடமை. மக்களை அந்தக் கட்டளைகளின் கீழான கட்டுக்குள் வைத்துக்கொள்ள வேண்டியது, கட்டளைகளை அமுல்படுத்தும் அரச நிறுவனங்களின் பொறுப்பாகும்.

இதில், பிரதான பங்கை வகிக்கும் தரப்பில், பாதுகாப்புத் தரப்பினரே உள்ளனர். அவர்களுடன், பொலிஸாரும் இணைந்து செயற்படுத்தும் திட்டங்களுக்கு, ஒத்துழைப்பு நல்கி, கட்டுப்படுத்த வேண்டும். இல்லையேல், கட்டுப்பாடுகள் கட்டவிழ்ந்துவிடும்; யாவும் கைவிட்டுப் போய்விடக்கூடும். இது பேராபத்தை உருவாக்கிவிடும்.

ஒரு வாரத்துக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை ஓரளவுக்கேனும் கொள்வனவு செய்திருப்பீர்கள்! ஆக, அத்தியாவசியமின்றி, தலையை வெளியில் காட்டவே கூடாது. வீடுகளுக்குள்ளே இருப்பதே சகலருக்கும் உசிதம்.

‘தனக்கும் தொற்றிக் கொள்ளக் கூடாது, தன்னாலும் தொற்றிவிடக் கூடாது’ எனும் தாரக மந்திரத்தை, ஒவ்வொருவரும் கட்டுக்கோப்புடன் கடைப்பிடித்தால் மட்டுமே, தொற்றாளர்களின் எண்ணிக்கையை ஓரளவுக்கேனும் கட்டுப்படுத்த முடியும். இல்லை, தலைகனத்துடன்தான் செயற்படுவோம் என நினைத்தால், இருப்பதையும் இழந்துநிற்க வேண்டிய நிலைமையே ஏற்படுமென்பதை, மீண்டும் வலியுறுத்தி ஞாபகமூட்டுகின்றோம்.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

வீம்புக்காகக் காதலிப்பது உண்மையானது அல்ல! நண்பர்கள் சிலர், சும்மா இருந்தவனைச் சீண்டி விட்டு, வேடிக்கை பார்ப்பதுண்டு.

காதல் வேடிக்கையானது அல்ல! உணர்வுபூர்வமான இதயங்களுக்குள் சங்கமிக்கும் உன்னத நிலை. இதன் தூய்மை தெரியாது, வலிந்து இதைப் புகுத்துவது, நல்லதல்ல; காதல் விற்பனைப் பொருளும் அல்ல! தூய வாழ்வின் மூலப்பொருள். இணையற்ற மேலான சங்கமம்; சந்தோசங்களின் உறைவிடம்.

இன்று காதல் எனும் பெயரில், பொதுவெளியில் ஆபாசம் மேடையேற்றப்படுகிறது. மக்கள் கூடும் கடற்கரையில், பூங்காவில் நாங்கள் காணும் ஜோடிகளில், உண்மைக் காதலர்கள் எத்தனை பேர்?

காதல் உலகை ஈர்க்கும் காந்தப்புயல். அறுக்க முடியாத ‘அன்புச் சங்கிலி’. உள்ளத்தில் அடிக்கடி மீட்டிடும் வீணையின் நரம்புகள். இந்த உணர்வு தேகம் எங்கும் பரவும் போது, காதலே வாழ்வாகி விடுகிறது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

தமிழ் மொழியின் இடத்துக்கு

# சீனமொழி எவ்வாறு வரமுடியும்?



எம்.எஸ்.எம். ஐயூப்

இலங்கையில், குறிப்பாக தென்னிலங்கையில் அரச அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றில், தமிழ் மொழி புறக்கணிப்பைப் பற்றி, எவ்வளவோ செய்திகள், கட்டுரைகள் ஊடகங்களில் வெளியாகியுள்ளன. ஆனால், அண்மைக் காலமாக, தமிழுக்குப் பதிலாக சீனர்களின் மொழியான ‘மண்டரின் மொழி’, பாவிக்கப்படும் சில சம்பவங்களைப் பற்றிய செய்திகள் வெளியாகியுள்ளன.

சீன நிறுவனம் ஒன்று, தமிழ் மொழியைப் புறக்கணித்தால், அது அவர்களது விருப்பம் என்று கூறிச் சமாளித்துக் கொள்ளலாம். ஆனால், அண்மையில் இவ்வாறு தமிழ் மொழிக்குப் பதிலாக, மண்டரின் மொழியைப் பாவித்த நிறுவனங்கள், சீன நிறுவனங்கள் எனக் கூற முடியாது.

சீன நிறுவனமாக இருந்தாலும், அந்த நிறுவனங்களுக்குத் தமிழைப் புறக்கணித்து, பெயர் பலகைகளைக் காட்சிக்கு வைக்க, சட்டப் படி முடியுமா என்பது கேள்விக்குறியே!

2019ஆம் ஆண்டே, முதல் முதலில், இது போன்றதொரு பெயர்ப் பலகையைப் பற்றி பேசப்பட்டது. கொழும்பு நகர திண்மக் கழிவுத் திட்டத்துக்கான பெயர் பலகையில் சிங்களம், ஆங்கிலம், மண்டரின் மொழிகளில் மட்டுமே, அத்திட்டத்தின் பெயர் குறிக்கப்பட்டு இருந்தது. “இது ஒரு வெளிநாட்டு நிறுவனத்தின் பெயர்ப்பலகை” எனக் கூறியிருந்த அப்போதைய தேசிய ஒருமைப்பாடு மற்றும் தேசிய மொழிகள் அமைச்சர் மனோ கணேசன், அதற்காக அந்த நிறுவனத்தின் அதிகாரிகளைக் குறை கூறியிருந்தார்.

இந்த விடயத்தைப் பற்றி, அவர் தமது ‘டுவிட்டர்’ கணக்கில் மேலும் கூறியிருந்ததாவது; ‘இலங்கையில், சீன நிறுவனங்களால் உள்ளூர் மொழிச் சட்டம் மீறப்படுவதைப் பொறுத்திருக்க முடியாது. தேவையான உதவிகளை வழங்க விரும்புகிறோம். அத்தோடு, சீனத் தூதரகம் உள்ளிட்ட சகலரையும் இது விடயமாகச் சந்திக்க இருக்கிறோம். இலங்கையிலுள்ள சீனர்கள், உள்ளூர் சட்டங்களை மதிக்க வேண்டும். சீன நிறுவனங்களின் பெயர்ப்பலகைகளில் இரண்டு அரச கரும மொழிகளில் ஒன்றையோ இரண்டையுமோ, புறக்கணித்து மண்டரின், ஆங்கிலம் ஆகிய மொழிகள் மட்டும் பாவிக்கப்படுவதைப் பற்றிய முறைப்பாடுகள் எமக்குக் கிடைக்கின்றன. வெளிநாட்டவர்கள் சட்டபூர்வமான உள்ளூர் மொழிகளை மதித்ததன் பின்னர் தான், எமது பெருந்தன்மை ஆரம்பிக்கின்றது’.

2020ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம், மற்றொரு சம்பவத்தைப் பற்றிய செய்திகள் வெளியாகி இருந்தன. அதாவது, கல்கிசை ரயில் நிலையத்தின் அறிவித்தல் பலகையில் அரச கரும மொழிகளான சிங்களம், தமிழ் ஆகிய இரண்டும் புறக்கணிக்கப்பட்டு ஆங்கிலம், மண்டரின் மொழிகளில் மட்டும், ரயில் நேர அட்டவணை எழுதப்பட்டு இருந்தது.

இதுதொடர்பாக, ‘கலம்பொ கஸட்’ (Colombo Gazette) இணையத்தளத்தின் ஊடகவியலாளர் ஒருவர், ரயில்வே திணைக்களத்தின் பொது முகாமையாளர் டிலந்த பெரேராவிடம் வினவிய போது, அப்பதவிக்குத் தாம் நியமிக்கப்படுவதற்கு முன்னர், அந்த அறிவித்தல் பலகை போடப்பட்டு இருந்ததாகவும் அது தொடர்பாக விசாரணையொன்றை ஆரம்பித்ததாகவும் கூறியிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அரச கரும மொழிகள் துணை ஆணையாளர் சிவப்பிரகாசம் மதிவாணன், “இலங்கையில் இயங்கும் சீன நிறுவனங்கள், மண்டரின் மொழியில் தமது பெயர்ப்பலகைகளைக் காட்சிக்கு வைக்கின்றன. அது, இலங்கையின் அரசியலமைப்பை மீறும் செயலாகும். பெயர்ப்பலகைகளில் இரண்டு அரச கரும மொழிகளே, முதலிடத்தைப் பெற வேண்டும்” என்று கூறியிருந்தார்.

சீன நிதி உதவியில் ஆரம்பிக்கப்பட்ட ‘அறுவக்காலு கழிவுப் பரப்பு’இன் (landfill) பெயர் பலகையிலும், சீன மொழிக்கு முதலிடம் வழங்கியிருப்பதாக அரச கரும மொழிகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் மதிவாணன் தெரிவித்து இருந்தார்.

இவ்வாண்டு மே மாத நடுப் பகுதியில், மற்றொரு சர்ச்சை எழுந்தது. அதன்படி, துறைமுக நகரப் பிரதேசத்தில் போடப்பட்டு இருந்த பெயர்ப்பலகை ஒன்றிலும் தமிழ் மொழி இல்லாமல் சிங்களம், ஆங்கிலம், மண்டரின் ஆகிய மொழிகள் மட்டும் பாவிக்கப்பட்டு இருந்தன.

அந்தப் பெயர்ப்பலகையின் புகைப்படம் சமூக வலைத்தளங்களில் பரவலாக விமர்சிக்கப்பட்டது. இதைப் பற்றி, தமது ‘டுவிட்டர்’ கணக்கில் கருத்துத் தெரிவித்து இருந்த, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன், ‘தமிழ் எழுத்துகள் இல்லை; பரவாயில்லை! விரைவில் சிங்களமும் இல்லாமல் போய்விடும். இலங்கையர்கள் அப்போதாவது விழித்துக் கொள்வார்கள் என நம்புகிறேன்’ எனக் குறிப்பிட்டு இருந்தார்.

பின்னர், அந்த விடயத்தைப் பற்றி, துறைமுக நகர நிர்மாணப் பணிகளுக்குப் பொறுப்பான, ‘கொழும்புத் துறைமுக நகர நிறுவனம்’ விளக்கமளித்து இருந்தது. இந்தநிறுவனம், ‘சைனா ஹாபர் என்ஜினியரிங் கம்பனி’ என்ற சீன நிறுவனத்தின் கீழான நிறுவனமாகும். இது, கடந்த டிசெம்பர் மாதம் சமூக வலைத்தளங்களில் உலாவிய தற்காலிகப் பெயர்ப்பலகை ஒன்றின் பழைய புகைப்படமாகும். அது அவ்வாறு சமூக வலைத்தளங்களில் வெளியிடப்படும் முன்னரே, அப்பெயர்ப்பலகை நீக்கப்பட்டு விட்டது’ என்று அந்த விளக்கத்தில் குறிப்பிட்டு இருந்தது.

இந்தப் பெயர்ப்பலகை, துறைமுக நகரத் திட்டத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்காகவும் அனுமதிக்கப்பட்ட ஏனையோருக்குமானதொரு பெயர்ப்பலகை எனவும் அவ்வாறான பெயர் பலகைகளில் சகல அரசகரும மொழிகளும் இருக்க வேண்டிய கட்டாயம் இல்லை என்றும் பெரும்பாலான ஊழியர்கள், உள்ளூர்வாசிகள் என்பதால் சிங்கள மொழியைப் பாவித்துள்ளதாகவும் கொழும்புத் துறைமுக நகர நிறுவனம், இலங்கையிலுள்ள சகல சமூகங்களையும் மதிப்பதாகவும், மேலும் குறிப்பிட்டு இருந்தது.

இது தற்காலிக பெயர்ப்பலகை என்பதால், அதில் தமிழ்ப் புறக்கணிப்பு நியாயமாவதில்லை. பெரும்பாலான ஊழியர்கள் உள்ளூர்வாசிகள் என்றால், அவர்களில் தமிழ் பேசுபவர்கள் இல்லையா என்ற கேள்வி எழுகிறது.

அதேவேளை, அதில் பிழை இல்லாவிட்டால், அந்தப் பெயர் பலகை நீக்கப்படத் தேவையில்லை; ‘பிழை நடந்துவிட்டது’ என்று, பெருந்தன்மையோடு ஏற்றுக் கொள்ள வேண்டியது தானே?

இவற்றை விடப் பாரதூரமானதொரு சம்பவம், கடந்த வாரம் இடம்பெற்றது. சட்ட மா அதிபர் திணைக்களத்தின் ‘ஸ்மார்ட்’ நூலகத்தின் பெயர்ப்பலகை, சட்ட மா அதிபர் தப்புல டி லிவேரா, சீனத் தூதுவர் ஆகியோரால் புதன்கிழமை (19) திறந்து வைக்கப்பட்டது. அதிலும் தமிழ் புறக்கணிக்கப்பட்டு, சிங்களம், ஆங்கிலம், மண்டரின் ஆகிய மொழிகள் மட்டுமே இருந்தன.

தமிழ் என்பது, இலங்கையின் இரண்டு அரச கரும மொழிகளில் ஒன்றாகும். சட்ட மா அதிபர், அரசின் உத்தியோகபூர்வ சட்ட ஆலோசகராவார். அவரது திணைக்களத்திலேயே, தமிழ் புறக்கணிக்கப்பட்டமையை ‘டெய்லி மிரர்’ பத்திரிகை, முன்பக்கச் செய்தியொன்றின் மூலம் சுட்டிக்காட்டியதை அடுத்து, அப் பெயர்ப்பலகை உடனடியாக நீக்கப்பட்டது. இதனைச் சட்ட மா அதிபரின் தகவல் அதிகாரி நிஷாரா ஜயரத்ன தெரிவித்து இருந்தார்.

சட்ட மா அதிபர், சிலவேளை அந்தப் பெயர்ப்பலகையைத் திறந்து வைக்க வருவதற்கு முன்னர் கண்டிருக்க மாட்டார். ஏனெனில், அவருக்கு அதைவிட முக்கிய அலுவல்கள் இருக்கின்றன. ஆனால், அவரது திணைக்களத்தின் எந்தவொரு பொறுப்பு வாய்ந்த அதிகாரியும் அதைக் காணவில்லையா?

தொடர்ந்து, சீன உதவியில் நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்களிலும் சீன நிறுவனங்களிலும் தமிழ் புறக்கணிக்கப்படுவதற்கான பொறுப்பை, யார் ஏற்க வேண்டும் என்பது தெளிவாகவில்லை. குறிப்பிடப்பட்ட சகல இடங்களிலும், இரண்டு அரச கரும மொழிகளில் ஒன்றுக்கே அநீதி இழைக்கப்படுகிறது.

ஆனால், இது போன்ற சர்ச்சைகள் எழும் போதெல்லாம், சீன அதிகாரிகளே பதிலளிக்கிறார்கள். இலங்கை அதிகாரிகளுக்கு, நாட்டில் அரச கரும மொழிப் பாவனையில் ஏற்படும் குறைகளை நீக்கும் பொறுப்பு, இல்லையா என்ற கேள்வி அதனால் எழுகிறது.

மொழிப் பாவனை மூலம், ஒரு சமூகத்தின் தன்மானத்தைச் சீண்டிப் பாரப்பது அநாகரிக செயலாகும். அதேவேளை, 30 ஆண்டுகளாக, இலங்கையில் பல்லாயிரக் கணக்கானவர்களின் உயிரைக் குடித்த போருக்கான காரணங்களில் ஒன்று, மொழிப் பிரச்சினையே என்பதைக் குறிப்பாக சம்பந்தப்பட்ட இலங்கை அதிகாரிகள் உணர வேண்டும்.

அதேவேளை, நாட்டில் அநாவசியமான பிரச்சினைகள் இது போன்ற சம்பவங்களால் உருவாகக்கூடும் என்பதை, சீன அதிகதாரிகள் உணராமையும் கேள்விக்குறியே. அவர்கள் இலங்கைத் தமிழர்களை, இந்தியர்கள் எனக் கருதிச் செயற்படுகிறார்களா எனவும் சிலர் கேள்வி எழுப்பலாம்.

ஏனெனில், இலங்கை தமிழர்கள், இந்தியாவுக்கு நெருக்கமானவர்கள். அதேவேளை, சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையே, நல்லுறவு இல்லை என்பதும் சகலரும் அறிந்த விடயமாகும்.

சீனா, இலங்கையின் நீண்ட கால நண்பன். சர்வதேச அரங்கிலும் சீனா, இலங்கை அரசாங்கத்துக்கு ஆதரவாகவே முடிவுகளை எடுக்கிறது. இந்த நிலையில், இலங்கை அரசாங்கம் உள்ளூரில் அசௌகரியத்துக்கு உள்ளாகும் வகையில், அந்நாடு செயற்படும் எனக் கூற முடியாது. ஆயினும், தொடர்ந்து பல சம்பவங்கள் இவ்வாறு நடைபெறுவதைப் பலர் பல விதமாக உணரலாம். இலங்கையில் பாரிய பொருளாதாரத் திட்டங்களை நடைமுறைப்படுத்த முயலும் சீன அதிகாரிகள், அதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

## கடிதங்கள்

### நேர்நிகர் வகுப்புகளால் மாணவர்களுக்கு பாதிப்பு

பாடசாலைகள், நடாளாவிய ரீதியில் மூடப்பட்டுள்ள நிலையில் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை ஊக்குவிக்கும் பொருட்டு, சமூக வலைத்தளங்கள், நேர்நிகர் (ZOOM) செயலிகள் ஆகியவை ஊடாக மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில், மாணவர்கள் 2 - 3 மணி நேரம் தொடர்ச்சியாக அலைபேசிகள், கணினி ஆகியவற்றின் கடும் ஒளிக்கு முன்பாகப் பார்வையைச் செலுத்துவதால், மாணவர்களுக்குப் பார்வைப் பிரச்சனை ஏற்படும் வாய்ப்புகள் உருவாகின்றன என மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.

இந்நிலையில், இரண்டுக்கும் மேற்பட்ட பிள்ளைகள் கற்கும்போது, மின்உபகரணங்களின் மின்கலங்களில் நீண்ட நேரம் மின்சாரத்தைச் சேமித்து வைத்திருக்காத காரணத்தால், மின் இணைப்பை வழங்கிவாறே, ஒலிவாங்கியாக காதுகளுக்கு மாட்டப்படும் கருவிகளை (HANDSFREE) பொருத்துவதால், மின்சார தாக்கத்துக்கு உள்ளாகும் நிலையும் ஏற்படும் வாய்ப்புள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டு உள்ளது.

இவ்வாறான, மாணவர்களின் ஆரோக்கியத்துக்கு கேடு விளைவிக்கும் மற்றும் விபத்துக்களுக்கான வாய்ப்புகள் கொண்ட கற்றல் செயற்பாடுகள் தொடர்பில், கல்வியியலாளர்கள் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வறிய குடும்ப மாணவர்கள், தமது கற்றல் செயற்பாட்டை முன்னெடுக்க முடியாத துர்ப்பாக்கிய நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளமையும் அவதானிக்கப்பட்டுள்ளது.

எனவே, மாணவர்கள், குடும்பங்கள் பாதிக்கப்படாத வகையில், கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்க, பயிற்சி செயற்பாடுகளில் ஆசிரியர்கள் அதிக அக்கறை செலுத்த வேண்டும் எனவும் சமூக ஆர்வலர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

க. அகரன்

தமிழகம்

# சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவராக இ.பி.எஸ்

## பன்னீர் தரப்பினர் அதிருப்தியில்

சட்டமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையான ஆதரவு இ.பி.எஸ் பக்கம் இருந்ததால், அவர், எதிர்க்கட்சித் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். இதனால் ஓ.பன்னீர்செல்வம் தரப்பினர் அதிருப்தியில் உள்ளனர்.



தமிழக சட்டமன்றத் தேர்தலில் 75 இடங்களில் அண்ணா திராவிட முன்னேற்ற கழக (அ.தி.மு.க) கூட்டணி வெற்றி பெற்றது. இதில், அ.தி.மு.க 65 இடங்களில் வென்றது. இதையடுத்து, `அ.தி.மு.கவில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு ஓ.பி.எஸ், இ.பி.எஸ் என இருவரிடையேயும் போட்டி நிலவியது.

இதன்பின்னர், கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு அறிக்கை மூலம் பன்னீர்செல்வம் வலியுறுத்தினார். இந்த அறிக்கையை அவர் தனிப்பட்ட முறையில் வெளியிட்டிருந்தார். இதனை ரசிக்காத எடப்பாடி பழனிசாமி, எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து பிரதமருக்கு கடிதம் எழுதினார்.

தொடர்ந்து அரபிக் கடலில் காணாமல் போன தமிழக மீனவர்களை மீட்க வலியுறுத்தியும் பிரதமருக்கு இரண்டாவது கடிதத்தை எடப்பாடி எழுதினார். தான் எதிர்க் கட்சித் தலைவர் என்பதைச் சுட்டிக் காட்டவே பிரதமருக்கு எடப்பாடி பழனிசாமி கடிதம் எழுதியாக பேசப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, கறுப்பு பூஞ்சை பரவல் குறித்து ஸ்டாலினுக்கு ஓ.பி.எஸ் எழுதிய கடிதத்தில் தன்னை `முன்னாள் முதலமைச்சர்' எனக் குறிப்பிட்டிருந்தார்.

புதுடெல்லி

# ‘உண்மை அஞ்சவில்லை’



‘டூல்கிட்’ விவகாரத்தில் டுவிட்டருக்கு கடிதம் அனுப்பியது தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள காங்கிரஸ் முன்னாள் எம்.பி., ராகுல், உண்மை பயப்படாமல் உள்ளதாக கூறியுள்ளார்.

கொரோனா சூழலைப் பயன்படுத்தி, பிரதமர் மோடியின் நற்பெயரை களங்கப்படுத்த, காங்கிரஸ் கட்சி, ‘டூல்கிட்’ எனப்படும், வழிகாட்டுதல்கள் அடங்கிய தொகுப்பை வெளியிட்டதாக, பாரதிய ஜனதா குற்றஞ்சாட்டியது. அது குறித்த பதிவை, பா.ஜ., செய்தி தொடர்பாளர் சம்பித் பாத்ரா, தன், ‘டுவிட்டர்’ பக்கத்தில் பகிர்ந்தார். அந்த பதிவின் கீழ், ‘ஏமாற்றுவதற்காக திருத்தி மாற்றப்பட்ட பதிவு’ என, டுவிட்டர் நிர்வாகத்தால் குறிக்கப்பட்டுள்ளது.

டுவிட்டரின் இந்த நடவடிக்கைக்கு, பா.ஜ., தரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில், டுவிட்டருக்கு எதிராக அளிக்கப்பட்ட புகார் அடிப்படையில், டுவிட்டர் நிர்வாகத்துக்கு விளக்கம் கேட்டு, டில்லி பொலிஸார் நேற்று கடிதம் அனுப்பினர். டில்லி, ஹரியானாவின் குருகிராம் உள்ளிட்ட இடங்களில் உள்ள டுவிட்டர் அலுவலகங்களுக்கு நேரில் சென்ற சிறப்பு பிரிவு பொலிஸார், அதற்கான கடிதத்தை வழங்கினர்.



மும்பை

டொக்டே புயலால்

# 86 பேர் கடலுக்கு பலி

மும்பை கடல் பகுதியில் மிதவைக் கப்பலுடன் சேர்ந்து மூழ்கிய இழுவை படகை, கடற்படையினர் மீட்டபோது 16 உடல்கள் மீட்கப்பட்டன. இதன்போது பலியானோரின் எண்ணிக்கை, 86 ஆக உயர்ந்துள்ளது.

மஹாராஷ்டிர மாநிலம், மும்பை அருகே கடலுக்குள், 700க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள், எண்ணெய் கிணறு பராமரிப்பு உள்ளிட்ட பணிகளில் ஈடுபட்டு இருந்தனர். ‘டொக்டே’ புயல் வீசியபோது, தொழிலாளர்கள் இருந்த, ‘பி - 305’ என்ற மிதவை கப்பலும், இழுவை படகும் கடலில் மூழ்கின. மிதவை கப்பலில், 261 பேரும், இழுவை படகில், 13 பேரும் இருந்தனர். மிதவை கப்பலில் இருந்து, 186 பேரும், இழுவை படகில் இருந்து இரண்டு பேரும் மீட்கப்பட்டனர். ஞாயிறன்று 70 உடல்கள் மீட்கப்பட்டன.

இழுவைப் படகை தேடும் பணியில் கடற்படையின் ஐ.என்.எஸ்.மற்றும் மகர் மீட்பு படகு என்பன ஈடுபட்டன. கடலில் மூழ்கிய இழுவை படகை கண்டுபிடித்த நிலையில், மஹாராஷ்டிராவின் ராய்காட் மாவட்ட கடல் பகுதியில் எட்டு உடல்களும், குஜராத்தின் வல்சத் மாவட்ட கடல் பகுதியில் எட்டு உடல்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

# குரைக்கும் மகளுக்கு வளைகாப்பு



கர்ப்பிணிப் பெண்களுக்கு நடைபெறும் வளைகாப்பு நிகழ்வைப் பற்றி நாம் அனைவரும் அறிந்திருப்போம்.

ஆனால், தம்பதியொன்று தமது வளர்ப்பு நாய்க்கு வளைகாப்பு நடத்தி மகிழ்ந்துள்ள சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

காஞ்சிபுரத்தைச் சேர்ந்த செல்வம், ரேவதி தம்பதியர் ‘டைசன்‘ என்ற பொமேரியன் நாய்யொன்றை வளர்த்து வருகின்றனர்.

இத்தம்பதியருக்கு குழந்தை இல்லாத காரணத்தினால் டைசனை தமது மகளாகவே நினைத்து வளர்த்து வந்துள்ளனர். இந்நிலையில், கடந்த மாதம் டைசன் கர்ப்பம் தரித்துள்ளமை தெரியவந்தது. இதனையடுத்து அதற்கு வளைகாப்பு நடத்தி பார்க்க ஆசைப்பட்டனர். அழைப்பிதழைத் தயார் செய்து, உறவினர்களுக்கு ‘வட்ஸ் அப்’பில் அனுப்பி வைத்துள்ளனர்.

அயோத்தி

# அயோத்தியில் ஒரே நேரத்தில் 2,000 பேர் தொழும் மசூதி

அயோத்தியில் கட்டப்படவுள்ள மசூதிக்கான வரைபடம், அயோத்தி மேம்பாட்டு ஆணையத்திடம் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

உத்தர பிரதேசத்தில், ராமஜென்ம பூமி வழக்கின், உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில், அயோத்தியில் மசூதி கட்ட தனியாக, 5 ஏக்கர் நிலத்தை முஸ்லிம்களுக்கு வழங்க 2019ஆம் ஆண்டு உத்தரவிட்டது.

ராமஜென்ம பூமி பகுதியிலிருந்து, 24 கி.மீ., தொலைவிலுள்ள தானிப்பூர் கிராமத்தில், 5 ஏக்கர் நிலத்தை மாநில அரசாங்க முஸ்லிம் வக்பு சபையிடம் வழங்கியது.

இந்த மசூதியை கட்ட, இந்தோ - -இஸ்லாமிய கலாசார அறக்கட்டளையை முஸ்லிம் வக்பு சபை அமைத்தது. இந்நிலையில், மசூதி கட்டுமானத்துக்கான வரைபடம், அயோத்தி மேம்பாட்டு ஆணையத்திடம் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டது. ஒரே நேரத்தில், 2,000 பேர் வரை தொழுகை நடாத்தும் வகையில், இம்மசூதி கட்டப்படுள்ளது. இதனுடன், 300 படுக்கை வசதிகளுடன் கூடிய பல்நோக்கு மருத்துவமனையும், சமூக சமையல் கூடம் ஒன்றும் இந்த வளாகத்தில் கட்டப்படவுள்ளன. இந்தியாவில் முஸ்லிம்கள் ஆற்றிய பங்களிப்பை முன்னிலைப்படுத்தும் வகையில் ஆய்வு கூடம் ஒன்றும் கட்டப்படவுள்ளது.



சென்னை

# ‘சாகும்வரை அரசியலில் இருப்பேன்’



‘என் உயிருள்ள வரை அரசியலில் இருப்பேன்; அரசியல் இருக்கும் வரை மக்கள் நீதி மய்யம் இருக்கும்’ என மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல் கூறியுள்ளார்.

தோல்வியை ஆராய்ந்து, அதில் வெற்றிப்பாடம் கற்பது, நாம் கண்ட சரித்திரம். மக்களிடம் ஓரளவு அறிமுகமானவர்களை நட்சத்திரங்களாக மின்ன வைக்க நாம் நினைத்தது, சிலருக்கு சர்வாதிகாரமாக தெரிந்தது.திறமையின் அடிப்படையில், பெரும் பொறுப்புகளை கட்சியில் சேர்ந்த சில நாள்களிலேயே தந்தேன்.

கூட்டணி வைப்பதில் நாம் காட்டிய வெளிப்படைத்தன்மையும், அதை தேர்ந்தெடுப்பதில், சிலருக்கு கொடுத்த பொறுப்பும் அனைவரும் அறிந்ததே.தோல்விக்கு பின், அவரவருக்கு இருக்கும் தார்மீக கடமையை ஏற்க வேண்டும். கடமைகளை மறந்து, நிகழ்ந்த தவறுகளை கொட்ட ஒரு குழி தேடுவது, சிலருக்கு ஜனநாயகமாக தெரிகிறது.

பொய் குற்றச்சாட்டுகளுக்கு, நாம் பதில் கூற வேண்டியதில்லை; காலம் பதில் சொல்லும். தனி மனிதர்கள், தங்கள் ஆதாயத்துக்காக, கட்சி உள்கட்டமைப்பை மாற்றி ஆடிய விளையாட்டுகள் இனி தொடராது. உருமாறிய மக்கள் நீதி மய்யத்தை அனைவரும் விரைவில் காண்பர்.

வர்ணங்களால் மடக்கும் பூஞ்சைகள்

# கண்களே குறி



இளங்கோ பாரதி

ilangobharathy727@gmail.com



“பேபி அம்மா பேபி அம்மா எனக் கூப்பிடும் பாட்டி அல்லது தாத்தாமாரின் குரல்களும், “ச்சி எப்ப பார்த்தாலும் பேபி அம்மா, நோபி அம்மானுக்கிட்டு, மனுசனை நிம்மதியாகவே இருக்கவிடுறதில்ல” என, பேத்தி, பேரன்மார்கள் முணுமுணுத்துகொண்டே பதிலளிப்பர்.

இன்னும் சிலர், வேண்டா வெறுப்புக்கு, பாட்டி அல்லது தாத்தாவின் பக்கத்தில் சென்று, “என்னாவாம்” என வினவுகையில், கைக்கெட்டிய தூரத்திலிருக்கும் ஏதாவது ஒன்றை எடுக்கவே கூப்பிட்டிருப்பார். அந்தநேரத்தில் வரும் கோபத்துக்குக் குறைவே இருக்காது.

எனினும், 10, 15 நிமிடங்களுக்குப் பின்னர், அதே குரல் மீண்டும் அழைக்கும், வீட்டிலிருக்கும் வயதுபோனவர்கள் இருவரைப் பார்த்துக்கொள்வதை விட, 10 குழந்தைகளை பார்த்துக்கொள்ளலாமென, பலரும் மனம்சலிப்புற்றுக் கூறுவதையும் கேள்விப்பட்டிருப்போம்.

வீட்டிலிருக்கும் வயதானவர்களிடம் பல கதைகள் இருக்கும். இப்போதெல்லாம் அவற்றை கேட்பதற்கே நேரம் கிடைப்பதில்லை, எத்திசையில் திரும்பினாலும், கொரோனாக் கதைகளே காதுகளுக்குள் ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கின்றன.

2019ஆம் ஆண்டுக்குப் பின்னர், ‘கொரோனா, கொரோனா’ எனக் கேட்டுக் கொண்டிருந்த காதுகளுக்குள் தற்போது, கலர்கலராய் பூஞ்சைக் கதைகள் ரீங்காரமிடத் தொடங்கியுள்ளன. ‘கறுப்பு பூஞ்சை’, ‘வெள்ளைப் பூஞ்சை’, ‘மஞ்சள் பூஞ்சை’ என, என்னென்ன வர்ணங்களில் பூஞ்சைகள்தொற்றிக்கொள்ளுமோ எனத் தெரியாது, பலரும் விழி பிதுங்கி நிற்கின்றனர்.

கொரோனா வைரஸின் கோரப்பசி இன்னும் ஆறவில்லை. கோடிக்கணக்கான மனித உயிர்கள், அதற்கு இரையாகி வருகின்றனர். அயல் நாடான இந்தியாவில், கொகொரேனாவுக்குப் போட்டியாக ‘கறுப்பு பூஞ்சை‘ (Mucormycosis) என்ற தொற்றுத் தீவிரமாகப் பரவிவருகின்றது.

இது, அண்மைக் காலத்தில் ஏற்பட்ட ஒன்றல்ல; 2002ஆம் ஆண்டே இந்நோய் கண்டறியப்பட்டு விட்டதாக மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றார்கள்.

‘கறுப்பு பூஞ்சை’த் தொற்றானது மண், தாவரம், உரம், ஈரமான இடங்கள், அழுகிய பழங்கள், காய்கறிகளில் பொதுவாகக் காணப்படும் பங்கஸினால் ஏற்படுகின்றதென விளக்கமளிக்கப்படுகிறது.

பக்றீரியா, வைரஸ் போல காற்றிலும், சுற்றுப்புறங்களிலும் உள்ள இந்தப் பங்கஸானது, நாசி (மூச்சுக்குழல்) வழியே உடலுக்குள் சென்று தொற்றை ஏற்படுத்துவதோடு மெல்ல, மெல்ல உடலின் அனைத்துப் பகுதிகளிலும் பரவுகின்றது.

இதுவரை இந்தியாவில், ‘கறுப்பு பூஞ்சை‘ தொற்றுக்கு உள்ளானவர்களில் 50 சதவீதத்துக்கும் அதிகமானவர்கள், குஜராத், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களைச் சேர்ந்தவர்களாவர்.

‘கறுப்பு பூஞ்சை‘த் தொற்றானது, உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்களுக்கே பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. குறிப்பாக, இரத்தத்தில் குளுக்கோஸின் அளவு கட்டுப்பாடில்லாத நீரிழிவு நோயாளர்கள், கொரோனாவால் தீவிரமாகப் பாதிக்கப்பட்டவர்கள், உடல் உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை மேற்கொண்டவர்கள், தீவிர சிகிச்சைப் பிரிவில் நீண்ட காலம் சிகிச்சை பெற்றவர்கள், இரத்தத்தில் அளவுக்கு அதிகமாக இரும்புச்சத்து உடையவர்கள், குறைவான வெண்குருதி சிறுதுணிக்கைகளைக் கொண்டவர்கள், புற்றுநோய், எச்.ஐ.வி தொற்றாளர்கள் போன்ற நோய்களால் பீடிக்கப்பட்டவர்களுக்கே ‘கறுப்பு பூஞ்சை‘த் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளது.

‘கறுப்பு பூஞ்சை‘த் தொற்றை ஆரம்பத்திலேயே கண்டறிந்து சிகிச்சை மேற்கொள்ளாவிட்டால், அது கண்களைக் கடுமையாகத் தாக்கி, பின்னர் உயிருக்கே ஆபத்தை ஏற்படுத்திவிடக்கூடும்.

‘கறுப்பு பூஞ்சை‘த் தொற்றின் அறிகுறிகளாக, தீவிர தலைவலி, கண் எரிச்சல், கண் சிவப்பாகுதல், கண்ணில் வலி, கண் வீக்கம், வாய், மூக்கு, நாக்கில் நிறமாற்றம், சுவாசிப்பதில் சிரமம், நெஞ்சு வலி, இரத்தம் கலந்த சளி, வாந்தி, திடீரென பார்வை மங்குதல் போன்றவை காணப்படலாம். மேலும், கன்னத்தில் ஏற்படும் வீக்கம், வாய்க்குள் தோன்றும் கறுப்பு நிறப் புண், கண் இமைகளில் வீக்கம் போன்றவைகளும் இதன் அறிகுறிகளாகக் காணப்படுகின்றன.

‘கறுப்பு பூஞ்சை‘ நோயானது திடீரெனத் தீவிரமடைந்து பரவுவதற்கான காரணம் எதுவென்ற கேள்விக்கு, மருத்துவ நிபுணர்கள் கூறும் பதில், அதிகரித்து வரும் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் என்பதாகவே உள்ளது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் பரவிய காலத்திலிருந்து, இதுவரை சுமார் 8,800 பேருக்கு ‘கறுப்பு பூஞ்சை‘த் தொற்றுப் பீடித்துள்ளது. தற்போது கொரோனா வைரஸின் பரவல் அதிகரித்ததன் விளைவாக ‘ஸ்டெறொய்ட்‘ (Steroid) சிகிச்சையின் பயன்பாடு அதிகரித்துள்ளது.



‘ஸ்டெறொய்ட்’ சிகிச்சையால் நோய் எதிர்ப்பாற்றல் குறைந்தவர்கள், அதன் பின்னர் நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்திக் கொள்ளத் தவறுவதால் பலருக்கு ‘கறுப்பு பூஞ்சை’த் தொற்று ஏற்படுகிறது. அதற்கடுத்ததாக, ‘வெள்ளைப் பூஞ்சை’, ‘மஞ்சள் பூஞ்சை’ ஆகியனவும் பரவுகின்றன.

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்து, 12 - 18 நாள்களுக்குள் ‘கறுப்பு பூஞ்சை‘த் தொற்றின் அறிகுறிகள் உணரப்படுவதாக மருத்து நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இத்தொற்றுக்கு, சிகிச்சை அளிப்பதற்கான முக்கிய மருந்தாக இருப்பது அம்ஃபோடெரிசின் பி (Amphotericin B) ஊசி ஆகும். இந்த ஊசி, ஒரு பூஞ்சை எதிர்ப்பு மருந்தாகும்.

இந்தத் தொற்றுப் பீடித்துள்ள நோயாளிகளை, கண் அறுவைச் சிகிச்சை நிபுணர்கள், காது, மூக்கு, தொண்டை நிபுணர்கள், நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர்கள் போன்ற மருத்துவ நிபுணர்களின் மேற்பார்வையின் கீழ் வைக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்படுகின்றது.

ஏனெனில், ‘கறுப்பு பூஞ்சை‘ நோய்த்தொற்று உடலின் வெவ்வேறு பகுதிகளை ஒரே நேரத்தில் பாதிக்கும் எனவும் உயிர்காக்கும் செயல்முறைகளின் ஒரு பகுதியாக, பூஞ்சையால் பாதிக்கப்பட்ட அனைத்து திசுக்களும் அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்பட வேண்டும் எனவும் கூறப்படுகின்றது. இதனால் சிலர் கண் பார்வையை இழக்க நேரிடும். சில சமயங்களில், இத் தொற்றால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு, 4-6 வாரங்கள் வரை நரம்பு வழி பூஞ்சை எதிர்ப்புச் செயல்முறை தேவைப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நோயைக் கட்டுப்படுத்த, நீரிழிவு நோயைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருத்தல், நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்துதல், கொரோனாவிலிருந்து மீண்ட பிறகு காது, மூக்கு தொண்டைப் பரிசோதனை செய்தல், ஊட்டச்சத்து மிக்க உணகளை நாளாந்தம் உட்கொள்ளல், மதுபானம் அருந்துவதைத் தவிர்த்தல், புகைப்பிடிக்கும் பழக்கத்தைக் கைவிடுதல், நாளாந்தம் உடற்பயிற்சி செய்தல், சுகாதாரப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்தல் ஆகியவை அவசியமாகும்.

இந்தியாவில், ‘கரும் பூஞ்சை’ நோயின் தாக்கம், வீரியம் கொண்டிருக்கும் நிலையில், இலங்கையில் இந்நோயின் அச்சுறுத்தல் உள்ளதா என்ற ஐயம் மக்களிடத்தில் தலைதூக்கியுள்ளது.

‘கறுப்பு பூஞ்சை‘ நோய்த் தொற்றுத் தொடர்பாக, இலங்கை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் (SLMRI) ஆய்வுகளை மேற்கொண்டு, தமது அறிக்கையை வெளியிட்டுள்ளது. இதுதொடர்பாக, விசேட வைத்திய நிபுணர் பிரிமாலி ஜயசேகர, ஊடகவியலாளர் சந்திப்பின்போது பின்வருமாறு கூறியிருந்தார்; ”அம்பாறையில் ஒருவருக்கு ‘கறுப்பு பூஞ்சை’ நோய் இருப்பதாக இனங்காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து, சமூகத்தில் இது தொடர்பான அச்சம் நிலவுகின்றது. இருப்பினும் இலங்கையின் வைத்திய பரிசோதனை அறிக்கையின் அடிப்படையில், 2019ஆம் ஆண்டு முதல், ‘கறுப்பு பூஞ்சை’ நோயாளர்கள் இனங்காணப்பட்டு வருகின்றனர். இதனடிப்படையில், 2019ஆம் ஆண்டு 42 பேருக்கும் 2020ஆம் ஆண்டு 24 பேருக்கும் 2021ஆம் ஆண்டில் இதுவரையில் 24 பேருக்கும் ‘கரும் பூஞ்சை’ நோய் இருப்பது இனங்காணப்பட்டு உள்ளது. இருப்பினும், இவர்களில் எவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்படவில்லை. இந்தக் கரும் பூஞ்சை நோய், இலங்கைக்குப் புதிதல்ல” எனவும் டொக்டர் பிரிமாலி ஜயசேகர தெரிவித்திருந்தார்.

அத்துடன், இத்தொற்றுப் பரவலடைவதற்கான அனைத்துச் சூழல் அமைப்புகளும் இலங்கையில் காணப்படுகின்றன. எமது மண்ணிலும் அந்தப் பூஞ்சை படர்ந்திருக்கின்றது எனவும் நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்தவர்களையே இந்நோய் பீடித்துக்கொள்கின்றது எனவும் அவர் எச்சரித்தார்.

ஆக, வயதானவர்களுக்குப் பார்வை மங்கும்போது, பக்கத்தில் இருக்கும் பொருள்கள்கூடக் கண்களுக்குத் தெரிவதில்லை. பத்து குழந்தைகளையும் பார்த்துக்கொள்வோமென இளம் குடும்பஸ்தர்கள் வீராப்புப் பேசுவர். இயலாமைக்கும் வீராப்புக்கும் கூட, கண்கள்தான் பிரதானமானவை. இந்தப் பூஞ்சைகள் கூட, கண்களைத்தான் குறிவைக்கின்றன. ஆகையால், சுகாதார வழிமுறைகளைக் கடுமையாகப் பின்பற்றுவதே சகலருக்கும் நலம் தரும்.

மாலி

# ஜனாதிபதி, பிரதமரை கையகப்படுத்திய இராணுவம்



மாலியிலுள்ள இராணுவ அதிகாரிகள், அந்நாட்டு இடைக்கால அரசாங்கத்தின் ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்பமைச்சரை நேற்று முன்தினம் கைது செய்துள்ளதாக பல தகவல் மூலங்கள் தெரிவித்துள்ளன.

அந்தவகையில், இராணுவப் புரட்சியொன்றின் மூலம் முன்னாள் ஜனாதிபதி பதவியிலிருந்து அகற்றப்பட்ட சில மாதங்களில் அரசியல் நெருக்கடிகள் மேலும் தீவிரமாகியுள்ளன.

மாலித் தலைநகர் பமகோவுக்கு வெளியேயுள்ள கடி இராணுவத் தளமொன்றுக்கே ஜனாதிபதி பஹ் என்டோ, பிரதமர் மொக்டன் உவானே, பாதுகாப்பமைச்சர் சுலெய்மனே டூக்கோரெ ஆகியோர் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக இராஜதந்திர, அரசாங்கத் தகவல் மூலங்கள் தெரிவித்துள்ளன.

அரசாங்க மறுசீரமைப்பொன்றில் இராணுவத்தின் இரண்டு உறுப்பினர்கள், அவர்களின் பதவிநிலைகளை இழந்த சில மணித்தியாலங்களிலேயே குறித்த நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

கடி தளத்திலேயே கடந்தாண்டு ஓகஸ்ட் மாதத்தில் முன்னாள் ஜனாதிபதி இப்ராஹிம் பூபக்கர் கெய்டா கொண்டு செல்லப்பட்டு இராணுவத்தால் இராஜினாமா செய்ப்பட்டிருந்தார். தவிர குறித்த முகாமில் ஏற்பட்ட கலகல் காரணமாக கெய்டாவுக்கு முந்தைய ஜனாதிபதி 2012ஆம் ஆண்டு அமடௌ டௌமனி தோரே பதவியிலிருந்து அகற்றப்பட்டிருந்தார்.

இஸ்ரேல்

## இஸ்ரேலிலுள்ள ‘நூற்றுக்கணக்கான பலஸ்தீனியப் பிரஜைகளை கைது செய்வோம்’

ஆக்கிரமிக்கப்பட்ட கிழக்கு ஜெருசலேம், முற்றுகையிடப்பட்டுள்ள காஸாவிலுள்ள பலஸ்தீனவர்களுக்கான ஆதரவுக்கான அண்மைய இருப்புப் போராட்டத்தில் பங்கெடுத்ததுக்காக, இஸ்ரேலிலுள்ள நூற்றுக்கணக்கான பலஸ்தீனப் பிரஜைகளை கைது செய்யவுள்ளதாக இஸ்ரேலியப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இம்மாதம் ஒன்பதாம் திகதி முதலில் 1,550 பேர் ஏற்கெனவே கைது செய்யப்பட்டுள்ளதாக அறிக்கையொன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமையிரவு இஸ்ரேலியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.





பிரான்ஸ்

## பார்வையை மீளக் கொண்டு வந்த பாசி புரதங்கள்

முழுமையாகப் பார்வையற்ற மனிதனொருவரின் பார்வையானது, பாசியில் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட ஒளி உணரக்கூடிய புரதங்களால் பகுதியளவில் மீளக் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஒப்டோஜெனட்டிக்ஸ் எனப்படும் சிகிச்சையே குறித்த நபருக்கு அளிக்கப்பட்ட நிலையில், இச்சிகிச்சை மூலம் கண்ணின் பின்னாலுள்ள கலங்களை புரதங்களைப் பயன்படுத்தி கட்டுப்படுத்தப்படுகிறது.

நடைபாதைக் கடவையிலுள்ள வர்ணம் தீட்டப்பட்ட கோடுகளைக் கண்டவுடனேயே குறித்த நபர் இச்சிகிச்சை வேலை செய்கின்றது என உணர்ந்துள்ளார்.

தற்போது குறித்த நபர் பொருட்களை எடுப்பார் என்பதுடன், மேசையிலுள்ள பொருள்களை எண்ணுவாரென நேச்சர் மெடிசின் சஞ்சிகை தெரிவித்துள்ளது.

பிரெஞ்சுத் தலைநகர் பரிஸிலேயே குறித்த நபர் சிகிச்சை பெற்றுள்ளார்.

இந்நபர் ஒளி உணரக்க்கூடிய கலங்களை 40 ஆண்டுகளுக்கு முன்னர் இழந்துள்ளார். இவ்வாறு உலகளாவிய ரீதியில் இரண்டு மில்லியன் பேர் காணப்படுகின்றனர்.

## நீதிமன்றில் சூகி...



மியான்மாரின் முன்னாள் தலைவரான ஆங் சான் சூ கியின் அரசாங்கமானது அந்நாட்டு இராணுவத்தால் இவ்வாண்டு பெப்ரவரி மாதத்தில் கலைக்கப்பட்ட பின்னர் முதற் தடவையாக நீதிமன்றத்தில் நேரடியாக அவர் ஆஜராகியுள்ளார்.

மலேஷியா

## கோலாலம்பூர் மெட்ரோ ரயில் விபத்தில் 213 பயணிகள் காயம்

மலேஷியத் தலைநகர் கோலா லம்பூரில் ரயில் விபத்தொன்றில் 213 பேர் காயமடைந்துள்ளனர்.


213 பயணிகளைக் கொண்ட மெட்ரோ ரயிலொன்று வெற்று ரயிலொன்றுடன் பெற்றோனஸ் கோபுரங்களுகருகிலுள்ள சுரங்கமொன்றில் நேற்று முன்தினம் 6.15 மணியளவில் மோதியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அப்போது திருத்தப்பட்ட வெற்று ரயிலானது ஒரே பாதையில் பயணிகளைக் கொண்டிருந்த ரயிலுக்கு எதிர்த் திசையில் பயணித்துள்ளது.

எந்த சதித் திட்டத்துக்கான சமிஞ்ஞையுமில்லையென மாவட்ட பொலிஸ் தலைவர் மொஹமட் ஸைனல் அப்துல்லாஹ் தெரிவித்துள்ளதுடன், ரயில் கட்டுப்பாட்டு நிலையத்திலிருந்தான தவறான கலந்துரையாடலாக இருக்குமென தாங்கள் சந்தேகிப்பதாகக் கூறியுள்ளார்.

காயமடைந்த 213 பேரில் 47 பேர் மோசமான நிலையிலிருப்பதுடன், 166 பேர் சிறு காயங்களுக்குள்ளானதாக அப்துல்லா தெரிவித்துள்ளார்.





சுவிற்ஸர்லாந்து

## திட்டமிடப்பட்ட பைடன்-புட்டின் சந்திப்புக்காக தயார்படுத்தல்கள்?

ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுக்குமிடையிலான திட்டமிட்ட சந்திப்பொன்றுக்காக ஆலோசகர்கள் தயாராகுகையில், ஜனாதிபதி பைடனும், ஜனாதிபதி புட்டினும் சுவிற்ஸர்லாந்தில் அடுத்த மாதம் சந்திப்பார்களென அந்நாட்டுப் பத்திரிகையான தகெஸ்-அன்ஸெய்கர் நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்நிலையில், முன்னாயத்த ஐ. அமெரிக்க குழுவானது இவ்விடயத்துக்காக ஏற்கெனவே ஜெனிவாவில் தரையிறங்கியுள்ளதாக, நம்பத்தகுந்த தகவல்மூலங்களை மேற்கோள்காட்டி குறித்த பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கெதிரான 2ஆவது ODI–யில்

# 246 ஓட்டங்களை பெற்ற பங்களாதேஷ்



இலங்கைக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் (ODI) 246 ஓட்டங்களை பங்களாதேஷ் பெற்றுள்ளது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷின் அணித்தலைவர் தமிம் இக்பால், தமதணி முதலில் துடுப்பெடுத்தாடுமென அறிவித்தார்.

பங்களாதேஷ் சார்பாக கடந்த போட்டியில் விளையாடிய மொஹமட் மிதுனை மொஷாடெக் ஹொஸைன் பிரதியிட்டதுடன், தஸ்கின் அஹ்மட்டைப் பிரதியிட்டு ஷொரிஃபுல் இஸ்லாம் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் அறிமுகத்தை மேற்கொண்டிருந்தார்.

இந்நிலையில், முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பங்களாதேஷ், இரண்டாவது ஓவரிலேயே அணித்தலைவர் தமிம் இக்பால், ஷகிப் அல் ஹஸனை துஷ்மந்த சமீரவிடம் இழந்தது.

அந்தவகையில், அடுத்து வந்த முஷ்பிக்கூர் ரஹீம், லிட்டன் தாஸ் ஆகியோர் இனிங்ஸை நகர்த்திய நிலையில், 25 (42) ஓட்டங்களுடன் லக்ஷன் சந்தகானிடம் தாஸ் வீழ்ந்ததுடன் தொடர்ந்து வந்த மொஷாடெக் ஹொஸைனும் குறிப்பிட்ட நேரத்தில் சந்தகானிடம் வீழ்ந்தார்.

பின்னர், ரஹீம், மகமதுல்லா இணைந்து இனிங்ஸை கட்டியெழுப்பிய நிலையில், மகமதுல்லா 41 (58), அஃபிஃப் ஹொஸைன், மெஹிடி ஹஸன் மிராஸ் ஆகியோர் சந்தகான், இசுரு உதான, வனிடு ஹஸரங்கவிடம் குறிப்பிட்ட இடைவெளிகளில் வீழ்ந்தனர்.

எவ்வாறெனினும் ரஹீம் தனித்து நின்று போராடி சதத்தைப் பூர்த்தி செய்ய, மறுபக்கத்தில் மொஹமட் சைபுடீன் ரண் அவுட்டானதுடன், ஷொரிஃபுல் இஸ்லாம் உதானவிடம் விழ, 125 (127) ஓட்டங்களுடன் ரஹீமும் சமீரவிடம் விழ, 48.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 246 ஓட்டங்களை பங்களாதேஷ் பெற்றது.

யூரோ 2020:

## ஸ்பெய்ன் குழாமில் றாமோஸ் இல்லை


ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் யூரோ கிண்ணத் தொடருக்கான ஸ்பெய்ன் குழாமில், அவ்வணியின் முன்னாள் தலைவரான சேர்ஜியோ றாமோஸ் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

காயத்தால் அவதிப்படும் 35 வயதான றாமோஸ், இவ்வாண்டு மார்ச் மாதத்துக்குப் பின்னர் ஒரு போட்டியில் மாத்திரமே விளையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதுவரையில் ஸ்பெய்னுக்காக 180 போட்டிகளில் றாமோஸ் விளையாடியுள்ளார்.

குழாம்: உனை சிமோன், டேவிட் டி கியா, றொபேர்ட் சஞ்சேஸ், ஜொஸெ கயா, ஜோர்டி அல்பா, போல் டொரஸ், அய்மெரிக் லபோர்ட்டே, எரிக் கர்சியா, டியகோ லொரன்டே, சீஸர் அத்பிலிகெட்டா, சேர்ஜியோ புஷ்கட்ஸ், றொட்றி, பெட்ரி, தியாகோ அல்கான்டரா, கொகே, பேபியன் ருய்ஸ், மார்கோஸ் லொரண்டே, டனி ஒல்மோ, மிகேல் ஒயர்ஸ்பல், அல்வரோ மொராட்டா, ஜெரார்ட் மொரேனோ, பெரன் டொரஸ், அடம் ட்ரரோரே, பப்லோ சரபியா.





## பி.எஸ்.எல்–இல் அப்ரிடி இல்லை


பாகிஸ்தானின் உள்ளூர் இருபதுக்கு - 20 தொடரான பாகிஸ்தான் சுப்பர் லீக் (பி.எஸ்.எல்) முல்தான் சுல்தான்ஸின் சகலதுறைவீரர் ஷஃகிட் அப்ரிடி, எஞ்சியுள்ள பி.எஸ்.எல்லின் எப்பகுதியையும் விளையாடாமல் விடவுள்ளார்.

பின் முதுகுப் பகுதி காயம் காரணமாகவே இவ்வாறு பி.எஸ்.எல்லை அப்ரிடி தவறவிடுகின்றார்.

பி.எஸ்.எல் மீள் ஆரம்பிப்புக்காக பயிற்சியில் ஈடுபட்டபோதே அப்ரிடி நோவை உணர்ந்ததாகவும், முழுமையான ஓய்வுக்கு வைத்தியர் ஆலோசனை வழங்கியுள்ளதாக முல்தான் சுல்தான்ஸ் தெரிவித்துள்ளது.

## மீண்டும் செல்சியில் ஹஸார்ட்?

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான றியல் மட்ரிட்டின் முன்களவீரரான ஈடின் ஹஸார்ட், தனது முன்னாள் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான செல்சிக்கு செல்ல விரும்புவதாகத் தெரிவிக்கப்படுகிறது.



ஐந்தாண்டு ஒப்பந்தமொன்றில் கடந்த 2019ஆம் ஆண்டு செல்சியிலிருந்து 30 வயதான ஹஸார்ட்டை றியல் மட்றிட் கைச்சாத்திட்ட நிலையில், றியல் மட்றிட்டில் அடிக்கடி காயங்களுக்குள்ளாகும் ஹஸார்ட் 30 போட்டிகளில் நான்கு கோல்களையே பெற்றுள்ளார்.

இந்நிலையில், செல்சிக்காக 245 போட்டிகளில் 85 கோல்களை ஹஸார்ட் பெற்றிருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது.



## அத்லெட்டிகோவில் தொடரவுள்ள லூயிஸ் சுவாரஸ்

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான அத்லெட்டிகோ மட்ரிட்டின் முன்களவீரரான லூயிஸ் சுவாரஸ், அடுத்த பருவகாலத்திலும் அத்லெட்டிகோவில் தொடரவுள்ளதாக உறுதிப்படுத்தியுள்ளார்.

கடந்தாண்டு செப்டெம்பரில் இன்னொரு ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனாவிலிருந்து அத்லெட்டிகோவில் நுழைந்த 34 வயதான சுவாரஸ், இரண்டாண்டு ஒப்பந்தமொன்றுக்கு இணங்கியிருந்தபோதும், அதில் இக்கோடைப்பருவகால வீரர்கள் ஒப்பந்தம் செய்யும் காலப்பகுதியில் எத்தொகையும் செலுத்தாமல் வெளியேறும் சரத்தொன்று உள்ளடக்கப்பட்டிருந்ததாக தகவல்மூலங்கள் தெரிவித்துள்ளன.

தனது முன்னாள் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான லிவர்பூலுக்கு சுவாரஸ் திரும்பவுள்ளதாகக் கூறப்பட்டிருந்தது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் புதன்கிழமை, 26 மே 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.